# கிழக்கொளி



வெளியீடு :
கிழக்குப் பல்கலைக் கழக ஊழியர்கள் சங்கம்.

''கிழக்கொளி'' திக்கெட்டும் பரவிட தீபாவளி வாழ்த்துக்கள்.

# MAITHELEE JEWELLERY

தரமான 22கரட் தங்க நகைகளுக்கு
மட்டுநகரில் நாட வேண்டிய இடம்

# மைதிலி ஜுவலரி

No. 39, Munai Street
BATTICALOA.
☎ 2947

## RAMANA VIDEO VISION

★ வீடியோ நாடாக்கள் வாடகைக்கு விடப்படும்.

★ ஒலி நாடாக்கள், வீடியோ நாடாக்கள் பதிவு செய்து தரமான முறையில் கொடுக்கப்படும்.

**RAMANA VIDEO VISION**

KALKUDAH ROAD,
VALAICHENAI

## SRI VICKNESWARA STORES

உங்களுக்குத் தேவையான சகலவிதமான
புகையிலை, சுருட்டு மற்றும்
பலசரக்குப் பொருட்களை மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஸ்தாபனம்.

**ஸ்ரீ விக்னேஸ்வரா ஸ்டோர்ஸ்**

இல. 199, பிரதான வீதி,
வாழைச்சேனை.

# கிழக்கொளி

(கலை, இலக்கிய காலாண்டுச் சஞ்சிகை)

தீபாவளிச் சிறப்பிதழ்

ஒளி: 2 வைகாசி 1992 - ஐப்பசி 1992 கதிர்: 1



பிரதம ஆசிரியர்:
இரா இராஜேஸ்வரன்

இணை ஆசிரியர்.
க. ராஜகோபால்

ஆசிரிய பீட உறுப்பினர்கள்:
திருமதி. சகா. பரராஜசிங்கம்
அ. நாகரெத்தினம்
சி. ஸ்ரீஸ்கந்தராஜா
த. பாலசுப்பிரமணியம்


'கிழக்கொளி' உங்கள் தரமான ஆக்கங்களை இலக்கிய வானில் பிரகாசிக்கச் செய்யும்.

தனிப்பிரதி விலை: ரூபா 15/-


தொடர்பு:
'பிரதம ஆசிரியர்',
'கிழக்கொளி'
நூலகம்
கிழக்குப் பல்கலைக் கழகம்
செங்கலடி.


## விடய அடக்கம்


1) 'உயர்கல்வி' (ஆய்வுக் கட்டுரை) 03
2) பாடும் மீனின் கீதமே...... (கவிதை) 05
3) தமிழ்க்கவிதை உலகில்—— (நினைவுக் கட்டுரை) 06
4) நம்பிக்கைத் தினம்...... (சிறப்புக் கட்டுரை) 10
5) பாரதி மீண்டும் ....(கவிதை) 11
6) ஞாயிற்றுச் சக்தியும் ... (கட்டுரை) 12
7) ஒன்றாவோம்......(கவிதை) 14
8) மலர்ந்தும் மலராத ... 15
9) இவளா என் காதலி...... (கவிதை) 17
10) நானும் ஒருவன்(கவிதை) 17
11) மெழுகுவர்த்தி எரிகின்றது (தொடர் நவீனம்) 18
12) இலங்கைத் தேசிய காங்கிர... (ஆய்வுக்கட்டுரை) 21
13) சொற்சங்கமப் போட்டி...... 25
14) உறவு என்னும் உலகங்கள்... (தொடர் நவீனம்) 26



கிழக்குப் பல்கலைக் கழக ஊழியர் சங்க வெளியீடு.



# நுழைவாயில்

**அன்பார்ந்த வாசகர்கட்கு எமது 'தீபாவளி' நல்வாழ்த்துக்கள்.**

**''சமாதானக் காற்றே வீசு!**
**சண்டை ஓய்ந்திட நீதூது பேசு!!**

எமது நாட்டின் வட- கிழக்குப் பகுதிகளில் கடந்த இரண்டரை வருடங்களாக நடைபெற்று வரும் உள்நாட்டு யுத்தத்தால், மனநிம்மதியற்று, மனித மந்தைகளாய் அகதி முகாம் பட்டிகளில் மக்கள் அடைபட்டுக் கிடக்கின்ற அவலநிலை. பசுந்தளிர்களெலாம் மடிந்து, இளைய தலைமுறை இலைகளெலாம் ஒடிந்து போகும் பரிதாப நிலை. யுத்தப் புழுக்கம் தாங்காது, சமாதானக் காற்றில் சுகம் காணத் துடிக்கும் மக்களின் அங்கலாய்ப்பு! சாந்தி, சமாதானம் வேண்டிப் பிரார்த்தனைகள்.

ஆமாம்! யுத்த இருளில் மூழ்கிக் கிடக்கும் வட - கிழக்கில் புத்தொளி வீசி, புதுப் பொலிவு பெற வேண்டி, நரகாசுரத்தனமழிந்த நன்னாளாம் ''தீபாவளி'' ச் சிறப்பிதழாக இதனை வெளியிடுவதில் மகிழ்வுறுகிறோம்.

வாசகர்களாகிய உங்களின் அமோக ஆதரவு பெருகி வருதல் கண்டு பெருமகிழ்ச்சி, ''கிழக்கொளி'' க் கதிர்கள் கீழைத்தேய மேலைத்தேய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலும் வேகமாகப் பரவி வருதலை, கிடைக்கப் பெறும் பாராட்டு மடல்களே பறைசாற்றுகின்றன.

இக்கதிரில், வழமையான பல்சுவை அம்சவர்ணக் கலவை வார்க்கப்பட்டுள்ளது. விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. சமகால நிகழ்வுகளைப் படம் பிடித்துக் காட்டும் தரமான ஆக்கங்கள், தப்பாது பிரசுரம் பெறும்.

'எமது சங்க உறுப்பினர்களாகத் திகழ்ந்து அமரத்துவமடைந்த த. வித்தியாரெத்தினம், கா. பாக்கியராஜா ஆகியோருக்கு இந்த இதழ் சமர்ப்பணம்.'

**ஆசிரியர்-**

# "உயர் கல்வி"

கலாநிதி. ப.வே. இராமகிருஷ்ணன்
பீடாதிபதி/கலை, கலாசார பீடம்
கிழக்குப்பல்கலை கழகம்.

இருபதாம் நூற்றாண்டு முடிவடைந்து விரைவில் இருபத்தோராம் நூற்றாண்டு ஆரம்பிக்க இருக்கின்றது. அடுத்துவரும் நூற்றாண்டுக்குரிய திட்டங்களை முன்னேறிய நாடுகள் வகுத்துக் கொண்டிருக்கும் இந்நாட்களில், எதிர்காலம் பற்றிய தெளிவின்மையோடு அமைதியின்மை காரணத்தாலும் பதட்டத்தை அனுபவிக்க வேண்டிய சூழ்நிலையில் நாம் வாழ வேண்டியிருக்கின்றது. சூழல் இவ்வாறிருப்பினும் வடக்கிலும் கிழக்கிலும் இரு பல்கலைக்கழகங்கள் இயங்கிக் கொண்டேயிருக்கின்றன. ஆச்சரியம், புதுமை மெச்சத்தக்கது என்றெல்லாம் கற்பனை உலகில் வாழாது, இன்றைய சூழலில் இவற்றின் பணி எத்தகையது அது எவ்வாறு இருத்தல் வேண்டும் என சிந்திக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. சிந்தித்ததன் முடிவுகளுக்கேற்ப நடமுறைகள் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதெல்லாம் கல்விமான்களதும் சமூக நலன் விரும்பிகளதும் கடமையுணர்வுக்குட்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

இக்கட்டான சூழ்நிலை காரணத்தால் புத்தி ஜீவிகள் பலர் நாட்டைவிட்டு வெளியேறிய வண்ணம் இருக்கிறார்கள். இதனால் தரமுள்ள ஆசிரியர்கள் ஆராய்ச்சியாளர்கள் தட்டுப்பாடும் பெரும் பிரச்சினையாகி விட்டது எனலாம். எஞ்சியுள்ளோரைப் பொறுத்தவரை பலர் பதட்ட நிலை காரணத்தால் சுதந்திரமாகக் கருத்துக்கூறத் தயங்குகிறார்கள். 'நமக்கேன் வீண் வம்பு' எனும் நிலை. இதனாலும் எத்தகைய பணி, நடைமுறைச் சாத்தியமானது எது என்பவையெல்லாம் விமரிசன ரீதியான ஆய்வுக்குட்படுவதாக இல்லை.

காலத்துக்குக் காலம் சமூகத்தைப் பற்றிய விடயங்களை விமரிசனத்துக்குட்படுத்தாது விட்டால், திக்குத் திசை உணராது தள்ளப்படும் சடப்பொருட்களாகவே கணிக்கப்படுவோம். கல்வித்துறையில் இது மிகவும் பொருத்தமானதாகவே இருக்கும். பதட்டம் நிலவும்போது, சந்தியிலுள்ள ஒரு சிலர், குறித்த திசையை நோக்கி ஓடிக்கொண்டிருப்பதைக் கண்டால் மற்றவர்களும் அதே திசையில் ஓடித்தப்ப முயல்வதைக் கண்டிருக்கிறோம். இதேபோல் கல்வியிலும் பலர் தமது பிள்ளைகளை டாக்டர்களாக்குவதற்கும் எஞ்ஜினியர்களாக்குவதற்கும் பெரும் முயற்சி எடுக்கிறார்கள். இதற்கு ஆங்கில அறிவும் தேவை என்கிறார்கள். ஆகவே எமக்கும் எமது பிள்ளைகளை டாக்டருக்கோ எஞ்சினியருக்கோ ஆங்கிலத்தினூடாகப் படிப்பிக்க வேண்டுமெனும் நோய்வாய்ப்பட்ட நிலை உருவாகி விடுகின்றது.

இந்நோய் காரணத்தால் பல்கலைக்கழகம் புகுவதற்குத் தயாரிக்கும் பள்ளிக் கூடங்களும் குறித்த சில விஞ்ஞான கணித பாடங்களோடு ஆங்கிலத்தையும் வற்புறுத்தி வருவதைக் காணலாம்.

இப்பயிற்சி போதாது எனும் வகையில் கேள்விக்குப் பதில் எழுதி குறுக்குவழி காட்டும் ரியூட்டறிகளும் இங்குமங்குமாக முளைத்து விட்டன. மாணவ சமூகத்துக்கோ மூச்சுவிட நேரமில்லாத நிலை. அதுமட்டுமல்ல. தாமாகச் சிந்திக்க வாய்ப்பளிக்காத நிலையும் கூட. (எதிர்காலச் சந்ததி எத்தகையது என்பது பற்றிச் சிந்திக்காததன் விளைவு இது)

''நோட்ஸ்'' கொடுக்காமல் விரிவுரை மட்டும் செய்துவிட்டு கட்டுரை எழுதச் சொல்

கிறார்களே. அது எப்படி எழுதலாமென மாணவன் கேட்டபோது, சம்பந்தப்பட்ட ஒரு சில நூல்களை வாசித்து, பின் சுயமாகச் சிந்தித்துக் கருத்துக்களை ஓரிரு பக்கங்களில் எழுதினால் தகுந்த புள்ளிகள் தரலாமெனக் குருவானவர் கூறினார். இதுவரை கொடுத்த நோட்ஸையே திருப்பிக் கொடுத்து புள்ளிகள் பெற்றிருந்தோம். சிந்திக்க வேண்டிய அவசியமே ஏற்படவில்லை. புத்தகங்களும் வாசிக்கவில்லை. மேலும், நூலகத்திலுள்ள புத்தகங்களோ பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டனவாக இருக்கின்றன. ஆங்கிலமோ பூச்சியம். பின்பு கட்டுரை எழுதுவது எவ்வாறு என மாணவன் தன் கேள்விக் கணைகளைத் தொடுத்தபோது குருவானவரும் திகைத்து நின்றார். அறிவு என்பது உண்மை பற்றிய விசாரணை சம்பந்தமானது. மாணவனோ ஒன்றையும் மறைக்காது உண்மையையே பேசினான். ஆகவே உண்மையை அறியும் நாட்டங் கொண்டவன் எனும் முடிவுக்கே குருவானவரும் வரலாயினார்.

பல்கலைக்கழகத்துக்குத் தெரிந்தெடுக்கும் முறையோ போட்டிச் சோதனை ஊடாக. ரயில் நிலையத்துக்கு வண்டி வந்து நின்றதும் பிரயாணிகள் போட்டி போட்டுக் கொண்டு ஆசனங்களைக் கைப்பற்றுமாப் போல் இருக்கும். இதில் வெற்றி பெற்றோர் சிலரே பெறாதவர்கள் பல்லாயிரக்கணக்கானோர். வேறு வழியில்லை எனும் விரக்தியடைந்த நிலை அவர்களுக்கு. தெரிவு செய்யப்பட்டு வருபவர்களும் பெரும்பாலோர் உடல் தேய்ந்தவர்களாய் வெறுமனே தகவல்களை அறிவெனக் கொண்டவராய் வந்து காட்சியளிப்பர்.

உடல் தேய்ந்த நிலையெனும் போது போட்டிச் சோதனைக்குப் படித்துக் கொண்ருந்தது மட்டுமல்ல, போஷாக்கின்மையும் துணைகாரணமாய் அமையும் வறுமை. கிழக்கைப் பொறுத்தவரை பலர் குடிபெயர்ந்த நிலை. அகதிகள் முகாம்களிலிருந்தும் சில மாணவர்கள் வருகிறார்கள்.

இவ்வித தேக நிலையோடு முன்பு குறித்த குறுகிய கல்விப் பயிற்சி. இதனால் அறியும் ஆவல் அவர்களுக்கில்லையென்பது தவறு. உரையாடல் வாயிலாக அவர்களிடமிருந்து பல விடயங்களை விரிவுரையாளர்களே அறியக்கூடியதாக இருக்கின்றது. ஆர்வத்துக்கு வாய்ப்பளிக்கப்படாத நிலையென்றே கூறவேண்டும். வாய்ப்புக்களை ஏற்படுத்தி அறியும் ஆர்வத்தை வளர்த்தெடுப்பதென்பது பல்கலைக்கழகங்களின் தலையாய கடமையாகும்.

நாட்டிலோ, எமது மண்ணை ஆக்கிரமித்த ஆங்கிலேயன் விட்டுச் சென்ற கல்வி முறை, இன்னும் நடைமுறையில் இருப்பதாகவேயிருக்கின்றது. தோட்டப் பயிர்ச் செய்கை அவற்றை ஏற்றுமதி செய்விக்க உதவும் நாணய சம்பந்தமான பட்டண நிறுவனங்கள், அங்குள்ள தொழில் வாய்ப்புக்கள் என்பவையெல்லாம் கல்வியை அவற்றுக்கு உதவும் கருவியாகவே மாற்றியமைத்து விட்டன. கட்டுப்பாடற்ற இறக்குமதிக் கொள்கையும் பட்டணங்களின் முக்கியத்துவத்தை பெருக்குவித்ததோடு பட்டண வாழ்க்கையையும் மேலும் வசதிப்படுத்தி விட்டதெனலாம். இதனாலும் கல்வி பெறும் இளைஞர்களோடு கல்வி பெற்றவர்களெல்லாம் தாம் வாழ்ந்த சூழலிலிருந்து அந்நியப்படுத்தப்பட்டவராய் மாற்றப்படுகின்றனர். கிராமங்களிலிருந்து பட்டணத்துக்கும், பட்டணத்திலிருந்து தலைப் பட்டணத்துக்கும், அங்கிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் ஏற்றுமதிப் பண்டங்களாகவே மாற்றப்படுகின்றனர். இலவசக் கல்வியோடு பல்லாயிரக் கணக்கானோர் இக்கதிக்கே ஆளாகின்றனர். வேரறுந்த நிலை.

குடும்பங்கள் சீர்குலைவதனாலும், சமூகம் சீரழிவதனாலும் இக்கல்வி கற்றவனும் கற்பவனும் கவனிப்பாரற்று தனிமைப் பட்டவனாக மாறுகின்றான். இதுவும் நிம்மதியின்மையை மேலும் வலுவடையச் செய்கின்றது. கிராமிய பொருளாதாரமும் பட்டண வாழ்க்கைக்கு முண்டு கொடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டதனால் பாரம்பரியத்தையே நிராகரிக்கும் நிலையும் உருவாகின்றது. இதனால் இரண்டுங்கெட்ட நிலையே இளம் சமுதாயத்தின் கதியாக மாறுகின்றது. இவர்களுள் சிலர் பல்கலைக்கழக மாணவர்களாகவும் எம்முடன் வந்து சேருகின்றனர். வர்க்க, பிரதேச சமய கலாசார ரீதியான வேறுபாடுகளோடு, போட்டிச் சோதனை காரணத்தாலும் மாறிய சூழ்நிலையாலும் வயதால் முதிர்ச்சியடைந்தவர்களாகவும் இருக்கின்றனர். சமூக நியமங்களை மதிக்காதவர்கள், குழப்பஞ் செய்பவர்கள், ஆங்கில அறிவின்மையால் தகைமை குறைந்தவர்களென போர் தொடுக்கும் அணுகு முறையைக் கைவிட்டு, அறியவைக்கும் பயிற்சியை அனுதாபத்தோடு அணுகக் கடமைப்பட்டுள்ளோம்.

( இன்னும் வரும் )

# பாடும் மீனின் கீதமே

சரசி - ராஜா
கல்லடி - உப்போடை

மட்டு நகர வாவி அது மகர யாழின் வீடு
பட்டுத் தெறிக்கும் நிலவு மனம் பாடும் அழகாய் பாட்டு
நெட்ட நெடிய தென்னை கரை நெடுக நிற்கும் காணீர்
தெட்டத் தெளிவாய் விளங்கும் நம் மட்டு நகர வாவி.

—★—

யாழின் இசையோ அன்றி அது தேனின் இனிமை யன்றோ
ஈழ நாட்டின் பெருமை இந்த மீனின் இனிய ஓசையே
நாளை நாட்டின் அமைதி வெகு நலமாய் ஆகும் என்றே
யாழில் கீதம் பாடும் இசை இனிதாய் பாடும் மீன்களே;

—★—

இசைகள் பலவாய் ஒலிக்கும் இனிய நிலவின் ஒளியிலே
திசைகள் எட்டுத் திக்கும் நம் மட்டு வாவி பெருமை
அசைவு இல்லா அமைதிகாண் அனைத்து வாவி எங்குமே
பிசகில்லாமல் ஒலிக்குமே இசை பாடும் மீனின் கீதமே.

—★—

விரும்பி மக்கள் கேட்கவே இசை நரம்பில் தெறிக்கும் நாதமே
கரும்பின் சுவையுமல்ல கற்கண்டு தேனும் அல்ல கடும்
இரும்பு மனதை இளக்கும் இது பாடும் மீனின் கீதமே இதை
திரும்பத் திரும்ப கேட்பினும் இதில் திருப்தியுண்டோ சொல்லடி.



பாரதி நினைவாக

# தமிழ்க் கவிதையுலகில் பாரதியின் புதுமைகள்

செ. யோகராசா எம். ஏ.
மொழித்துறை, கி. ப, கழகம்

"சுவை புதிது; பொருள் புதிது;
வளம் புதிது; சொற் புதிது;... —

என்று பாடியவன் பாரதி. இவற்றோடு இன்னும் பல விதங்களிலும் பாரதியின் கவிதைகள் புதுமைகள் பெற்றிருந்தன. இவற்றுள் முக்கியமானவற்றைச் சுருக்கமாகக் கோடிட்டு காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கவிதைப் பொருளில் பாரதி ஏற்படுத்திய புதுமை முதலிலே குறிப்பிடத்தக்கதாகிறது. பாரதி காலத்திற்கு முற்பட்ட கவிதை வரலாறு பற்றி இவ்விடத்தில் நினைவு கூருவது அவசியமாகும். சங்க காலத்தில் உயர் மக்களது வாழ்க்கை 'நாடக வழக்'கோடு பொருந்த வெளிப்படுத்தப்பட்டது. சங்க மருவிய காலத்திலே அறம் கூறுதல் நோக்கமாயிற்று. பல்லவர் காலத்தில் பக்தி உணர்ச்சியை வெளிப்படுத்துவது முக்கிய பண்பானது. சோழர் காலத்திலே காவியங்கள் சிறப்புப் பெற்றன; 'தன்னிகரில்லாத் தலைவன்' பற்றி அவை பேசின. நாயக்கர் காலத்திலே தத்துவம் முக்கியம் பெறுகிறது; தலங்கள் சிறப்புப் பெறுகின்றன; மிகையான கற்பனைகள்; சொல்லலங்காரம் என்பன பெருமளவு வெளிப்படுகின்றன; மடங்களையும் ஆதீனங்களையும் சார்ந்து தமிழ் வளர்கின்றது; வித்துவ வெளிப்பாடு முக்கிய குறிக்கோளாகிறது; சிருங்கார ரசனை விரும்பப்படுகிறது. சிற்றரசர்களும் சமஸ்தான பிரபுக்களும் போற்றப்படுகிறார்கள். சுருங்கக் கூறின் கவிதை சத்தற்ற சக்கையாக விளங்குகிறது. ஐரோப்பியர் காலத்திலும் பின்னர் பாரதி கவிதையுலகிலே அடியெடுத்து வைக்கின்ற வேளையிலும் தமிழ்க்கவிதையின் நிலை இதுதான்.

அரசியல், சமூக, பொருளியல் துறைகளில், ஆங்கிலேயர் ஆட்சியில் ஏற்பட்டுவந்த மாற்றங்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டைவிட இருபதாம் நூற்றாண்டில் அதிகரித்தன. கலை, இலக்கியத்துறைகளிலும் மேலைத் தேயச் செல்வாக்கு படரலாயிற்று. இத்தகு சூழலில் கால உணர்வுடையவனாகவும், அரசியல் வாதியாகவும், பத்திரிகை ஆசிரியனாகவும் தமிழ்மொழிப்பற்று மிகுந்தவனாகவும் விளங்கிய பாரதி கவிதைத்துறையிலே விசேட அக்கறை காட்டினான். சமகால விடயங்கள் அன்றாட அனுபவங்களை கவிதைப் பொருளாக மாற்றினான். அவ்வேளையில் தேச விடுதலை பற்றிய சிந்தனைகள் ஆதிக்கஞ் செலுத்தத் தொடங்கின. தேசவிடுதலை - தேசபக்தி - தேசியம் என்பன அதாவது 'அரசியல்' கவிதைப் பொருளாக மாறும் நிலை ஏற்படுகிறது. விடுதலைக்குத் தடையான சமூகப் பிரச்சினைகள் அடுத்த நிலையில் முக்கியம் பெற்றன. சமூகம் கவிதைப் பொருளாக மாறுகிறது. இவ்வாறாக, கவிதையையும் அரசியலையும் கவிதையையும் சமூகத்தையும் முதன்முதலாக - பிரக்ஞை பூர்வமாக - இணைத்தவன் பாரதியே.

இன்னும் ஆழமாக நோக்கினால் இரு விடயங்களைக் கூறவேண்டும். சமகால விடயங்கள் அனுபவங்கள் என்கின்றபோது மேற்கூறியவாறான நாட்டுநிலை, சமூக நிலை மட்டுமல்ல அன்றாட, சாதாரண அனுபவங்

களும் பாரதியினால் பாடப்பட்டன. (எ-டு: புயற்காற்று, பிழைத்த தென்னந் தோப்பு, சாதாரண வருஷத்துத் தூமகேது) இவ்வாறே, தேசியம் என்கின்றபோது, தமிழ்த்தேசியம், மட்டுமன்றி, இந்திய தேசியம், சர்வதேசியம் என்பனவும் பேசப்பட்டன. முற்கூறிய தமிழ்க் கவிதை வரலாற்றை மனங்கொள்வோமானால், பாரதி, தான் நிகழ்த்திய புதுமைகளினூடாகத் தமிழ்க் கவிதை வரலாற்றில் ஒரு பெருந்திருப்பு முனையை ஏற்படுத்தியமை தெளிவாகும்.

மேலே கூறிய அரசியல், சமூகம், அன்றாட அனுபவங்கள் என்பன புதிய பாடு பொருட்கள். அதே வேளையில் பழைய விடயங்களும் புதிய நோக்கில் பாரதியினால் பாடப்படுகின்றன. இவ்விதத்தில் சமயம், இயற்கை, காதல் என்பன விதந்துரைக்கப் பட வேண்டியவை.

சமயம் பற்றி பல கூறலாமாயினும் மூன்று படைப்புகளை மட்டும் இங்கு எடுத்துரைக்கலாம். ஒன்று கண்ணன் பாட்டுப்பற்றியது; கண்ணனை, சேவகன், சீடன், காதலி என்றவாறு பதிய உறவு நிலைகளில் கண்டு கொண்டதுமட்டுமன்றி அவற்றில் சமகால சமூக, அரசியல் நிலைகளும், சிந்தனைகளும் ஆங்காங்கே வெளிப்படுகின்றன; கவித்துவத்தின் உச்சங்கள் பலவிடங்களில் எட்டப்படுகின்றன. மற்றொன்று, விநாயகர் நான்மணி மாலை. நான்மணிமாலை பழைய பிரபந்த வடிவங்களிலொன்று. ஆனால் இதில் பேசபடுவன புதியவை; மொழிப்பற்று, நாட்டுப் பற்று, விடுதலை வேட்கை முதலியவை. இன்னொன்று, தோத்திரப் பாடல்கள். இத் தொடர்பில் ஒரு விடயத்தை மட்டும் தொட்டுக்காட்டுகின்றேன். கிறிஸ்தவர்கள் மத்தியில் சமயம், கல்வியை, மனவளர்ச்சியைச் சார்ந்து வளர்ந்திருக்க, இந்துக்களிடம் சமயம் (நடைமுறையில்) அறியாமையை, மூடநம்பிக்கையை, அனுஷ்டானங்களைச் சார்ந்த ஒன்றாகிச் சீரழிந்துள்ளதை பாரதி கண்டு கொண்டான். இந்த நிலையை மாற்றவேண்டுமென்ற ஆவேசம் தோத்திரப் பாடல்களினூடே கிளம்புகிறது 'பக்தி', ஸரஸ்வதி தேவியின் புகழ், லக்ஷ்மி பிரார்த்தனை, வேலன் பாட்டு முதலியன இவ்விதத்தில் கவனிக்கத்தக்கன. இவற்றிலே கல்வி, சமத்துவம் முதலியனபற்றி வற்புறுத்தப்படுகின்றன.

'இயற்கை', சங்க காலந்தொடக்கம் கவிதைகளில் இடம்பெற்று வந்துள்ளது. பொதுவாக நோக்கும்போது சங்க காலத்தில் பாத்திர உணர்வுகளை வெளிப்படுத்துவதற்குப் பக்கபலமாகவும், பல்லவர் காலத்தில் பக்தியுணர்வை வெளிப்படுத்துவதாகவும், சோழர்காலத்தில் நாட்டு வர்ணனையாகவும், நாயக்கர் காலத்தில் தல வர்ணனையாகவும் அது விளங்கியது. இயற்கை - இயற்கை என்ற நிலையில் நோக்கப்படுவது - பாடப்படுவது - இருபதாம் நூற்றாண்டிலிருந்தேயாகும். பாரதியே அதன் முன்னோடி.

காதலுக்கு சங்க இலக்கியங்கள் முதன்மையிடம் வழங்கின. பின்னர், சமயங்களின் செல்வாக்கு காதலைப் புறக்கணித்தது. பாரதி காதலின் மகத்துவத்தை - அருமை, பெருமைகளை - உளமாரப் புகழ்கின்றான். 'மரணமிலாப் பெருவாழ்வை காதலினால் மனிதர்கள் அடைய இயலும்' என்ற நம்பிக்கையையும் கொண்டிருந்தான் பாரதி.

தமிழிலே குழந்தைப் பாடல்களை முதன் முதலாக இயற்றியன் பாரதியே. ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலானவற்றை குழந்தை இலக்கியங்களென்று கூறுவாருள்ளனர். அடிப்படையில் அவை நீதி இலக்கியங்களே. குழந்தைப் பாடல்களுக்கு வேண்டிய எளிமை, இனிமை, சந்தம், ஓசை என்பன அவற்றில் இல்லை. ஆயின், பாரதியின் 'பாப்பாப் பாட்டு' இத்தகு இயல்புகளைப் பெற்றுள்ளது. (பாரதி இதனை இயற்றியது மகள் சகுந்தலாவுக்காகவே).

பொருட் புதுமைகள் மேற்கூறியவாறாக அமைய, வடிவப் புதுமைகள் பற்றி இனிக் கவனிப்போம்.

சிந்துப்பாடல் வடிவங்களை செல்வாக்குப் பெறச்செய்தவன் பாரதி. அகவல், விருத்தம்

முதலியனவற்றைக் கையாண்டாலும் சிந்துவே பாரதியால் பெருமளவு விரும்பப் பட்டது. பாரதிக்கு முற்பட வாழ்ந்த அண்ணாமலை ரெட்டியார் முதலானோர் சமயப் பொருளினைச் சிந்துவில் பாட., பாரதி, அரசியலைப் பாடுவதற்கு அதனைக் கையாள்கின்றான்; சிந்துவுக்குத் தந்தை எனப் பாராட்டப் படுகின்றான்.

நாட்டார் பாடல் வடிவங்களுக்கும் பாரதி உன்னத வாழ்வளிக்கின்றான். மாணிக்கவாசகர் இவ்வடிவங்களைக் கையாண்டு தத்துவக் கருத்துக்களை வெளிப்படுத்தியமை நாமறிந்ததே. பாரதி, தேசவிடுதலை, பெண் விடுதலை முதலினபற்றிப் பாடுவதற்கு இவற்றைப் பயன்படுத்தினான்: புதிய கோணங்கி, சுதந்திரப்பள்ளு என்பன சிறந்த உதாரணங்கள்.

இசைப்பாடல்கள் பல்லவர் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தன. மக்கள் மத்தியிலே பக்தியுணர்ச்சியினை மிகுவித்து, சமயப் பிரச்சாரம் செய்வதற்கு ஏற்றவை எனவுணர்ந்த அடியார்கள் இவற்றைக் கையாண்டனர். பின்னர் செல்வாக்கிழந்திருந்த இசைப்பாடல் மரபிற்கு மீண்டும் புனர்வாழ்வளித்தவன் பாரதி. சாதாரண மக்கள் மத்தியிலே பாரதி பாடல்கள் செல்வாக்குப் பெறுவதற்கு இதுவும் முக்கிய காரணமாயமைந்தது.

தன்னுணர்ச்சிப் பாடல்கள் தமிழ்க் கவிதை மரபிலே மும்கியமானவை. சங்க காலத்திலும் பல்லவ காலத்திலும் செல்வாக்குப் பெற்றிருந்த இவை பின்னர் நலிவுற்றிருந்தன. சமகால விடயங்களை - சாதாரண அனுபவங்களை - பாடப் புறப்பட்ட பாரதி இத்தகைய பாடல்களை இயற்றியமை இயல்பானதே. அதே வேளையில் தனது 'தனி மனித அனுபவ'த்தைப் பொதுமைப்படுத்தியதனூடாக தரமுயர்ந்த தன்னுணர்ச்சிப் பாடல்களைப் பாரதி தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மரபுக் கவிதையைவிட, இன்று புதுக் கவிதை பெருஞ்செல்வாக்குப் பெற்று விளங்குகிறது. இத்தகைய புதுக்கவிதை முன்னோடியாகவும் பாரதியே கருதப்படுகின்றான்; 'வசன கவிதை' என்ற தலைப்பிலே அடங்குவன இத்தகையனவேயாகும்.

மேற்கூறியவாறாக, கவிதைப் பொருள், வடிவம் என்பவற்றில் மட்டுமன்றி, சொல்லாட்சிகளிலும் புதுமை செய்தவன் பாரதி. எடுத்துக்காட்டாக, 'பொங்கி வரும் பெருநிலவு', 'புன்னகையின் புதுநிலவு', 'பேசும்' பொற்சித்திரம்', 'பிள்ளைக் கனியமுது' 'செல்வக் களஞ்சியம்' என்பன புதிய சொற்றொடர்களல்லாமல் வேறென்ன? இதுமட்டுமன்று, நாட்டார் பாடல்களில் இடம்பெறும் சொல்லாட்சிகளும் பாரதி கைபட்டு உயர் வாழ்வு பெற்றுள்ளன (எ - டு: 'நொள்ளைக் கதைகள்', 'தங்கமே தங்கம்'). பேச்சு வழக்குச் சொற்களைக் கையாண்டு பண்டிதர்களின் ஏச்சுகளுக்குள்ளானவனாக பாரதி விளங்கினான். (எ - டு: 'வாத்தி', 'போச்சுது')

பாரதி காலத்தில், கவிதை நடை கடினமான தன்மை பெற்றிருந்தது. எளிமையான நடை காணப்பட்டிருக்குமேல் அது அர்த்தமற்ற வெற்றுச் சொற்களைக் கொண்டிருந்திருக்கும். கவிதையை, பொதுமக்களை நோக்கித் திருப்பிய பாரதியோ எளிமை மிகுந்த நடையை பிரக்ஞை பூர்வமாகக் கையாண்டான்; புது மரபைத் தொடக்கி வைத்தான். (ஆனால் பாரதிக்குப் பிற்பட்ட-குறிப்பாக, அண்மைக்காலக் கவிஞர்கள் 'எளிமை' என்பதனைத் தவறாகவே புரிந்து கொண்டுள்ளனர்)

தமிழ்க் கவிதையுலகிலே புதிய முயற்சிகள் சிலவற்றின் ஆரம்ப கர்த்தாவாகவும் பாரதி திகழ்கின்றான். சுயசரிதை, பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு என்பன இவ்விதத்தில் கவனிக்கப்பட வேண்டியவை. 'சுயசரிதை' என்பதே தமிழுலகிற்கு முற்றிலும் புதியது. (கவிதையில் மட்டுமன்றி, வசன நடையிலும் கூட தமிழ்மரபு சுயசரிதை எழ வழிகாட்டவில்லை; இதற்குப் பல காரணங்களுள்ளன). 'பாஞ்சாலி சபதம்', நவீன காவியப்போக்கின் ஆரம்பத்தைக் குறித்து நிற்கிறது. இதிகாசக்

கதையொன்று, காலத்திற்குகேற்ப, புதிய நோக்கில் இங்கு அணுகப்படுகிறது; அரசியல் விடுதலையும் பெண்விடுதலையும் இதன் உள்ளுறை பொருட்களாகின்றன. 'குயில்பாட்டு', தமிழில் முதன் முதலாக எழுந்த நெடும் பாடல்; கதைப்பாடல்.

'குயில்பாட்டு' இன்னொரு விதத்திலும் குறிப்பிடத்தக்கது; அவரவர் அறிவுக்கும் அனுபவத்திற்கும் காலத்திற்குமேற்ப புதிய புதிய விளக்கங்களைத் தருகிறது. வேதாந்த நோக்கில் - சித்தாந்த நோக்கில் - இயற்கை நோக்கில் - தமிழ் நோக்கில் - காதல்நோக்கில் கனவு என்ற நோக்கில் - கவிதை என்ற நோக்கில் - பிராய்ட்டின் உளவியல் நோக்கில்- மேலைத்தேய இலக்கியத்தாக்கம் என்ற விதத்தில் - குயில்பாட்டு வெவ்வேறான விளக்கங்களைப் பெறுகிறது. பாரதியின் 'அக்கினிக் குஞ்சு' என்ற சிறு கவிதையும் இத்தகைய சிறப்புப் பெற்றுள்ளது. சிறந்ததொரு இலக்கியப் படைப்பின் இயல்பே இதுதான். இல்லையா? பாரதி இவ்விதத்தில் புதுமை நிகழ்த்தியுள்ளான். பாரதிக்குப் பிற்பட்ட கவிஞரெவரதும் படைப்புகள் இத்தகைய சிறப்பினைப் பெற்றிருக்கவில்லை என்றே கூற வேண்டும்.

தமிழ்க் கவிதையுலகிலே பாரதி நிகழ்த்திய புதுமைகள் - சாதனைகள் - மேற்கூறியவை மட்டுமல்ல. இன்னும்பலவுள்ளன; விரிவஞ்சி அவை இங்கு கூறப்படவில்லை.

இதுமட்டுமன்று; கட்டுரையுலகிலும் பாரதி புதுமைகள் செய்தவன் என்பதையும் இவ்விடத்தில் நினைவுகூர்வது அவசியமாகும். ✦

## அடுத்த கதிரில்....

1. க. பிரேம்குமார் எழுதும் ''உமது சூழலைத் தெரிந்து கொள்'' எனும் சிறப்புக் கட்டுரை.
2. ஆரையூர் றோஜாவின் "கல்'' (உருவகக்கதை)
3. தேவலோகத்திலும் 50% (நகைச்சுவைத் தொடர்) மற்றும் பல் சுவை அம்சங்கள்.

## இலக்கியச் செய்திகள்...

1. கனடாவிலிருந்து இலக்கிய மணம் பரப்பும் 'நான்காவது பரிமாணம்' (கலை, இலக்கிய மாசிகை) திரு. க. நவம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளி வருகின்றது. ஆக்கங்கள் அனுப்ப விரும்பும் இலக்கிய நெஞ்சங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.
2. மருதூர் எம். தமீமின் ''தடங்கள்'' (கவிதைத் தொகுப்பு) வெளி வந்துள்ளது.

   தரமானதோர் இலகியப் படைப்பு.

# நம்பிக்கைத் தினம் தீபாவளி இல்லங்கள் தோறும் தீபஒளி

ஜே. பி. சோதி
தாழையூர்.

துன்பங்களிலிருந்து விடுதலை, இருளிலிருந்து ஒளி, கவலையிலிருந்து மகிழ்ச்சி இவை தாம் தீபாவளித் திருநாள் எமக்குக் கொண்டு வரும் செய்திகள்.

தமிழ் மக்கள்கொண்டாடும் முக்கியமான திருநாள் மூன்று. அவை தைப்பொங்கல், சித்திரைப் புத்தாண்டு, தீபாவளி ஆகியவையே. இவற்றுள் தைப்பொங்கல் உலகிற்கு சக்தி அளித்து உயிர் கொடுக்கும் ஆரிய தேவனுக்கு எடுக்கப்படும் நன்றி நவில் விழாவாக அமைய, புத்தாண்டுத்தினமோ பழைமைகள் கழிந்து புதுமைகள் பிறக்கும் அற்புதத்திருநாளாகவும், தீபாவளி துன்பங்களில் இருந்து விடுதலை பெறுவதற்கான நம்பிக்கைத் தினமாகவும் அமைகின்றது.

'தீபாவளியை' நாம் ஏன் கொண்டாடுகின்றோம்? அதற்கு ஒரு கதைப் பின்னணி உண்டு. நரகாசுரன் என்று ஓர் அரசன் நாட்டு மக்களுக்குப் பலதுன்பங்கள் செய்து முனிவர்களுடைய தவத்தையும், யாகத்தையும் அழித்தான். எல்லோரும் கிருஷ்ண பரமாத்மாவிடம் சென்று முறையிட்டார்கள். கிருஷ்ண பகவான் மனமிரங்கி நரகாசுரனுடன் பெரும் போர் செய்தார். நரகாசுரன் வீழ்ந்தான். நரகாசுரனுக்கு அப்பொழுதுதான் புத்தி வந்தது. தன்னுடன் போர் செய்தவர் கிருஷ்ண பகவான் என்பதை உணர்ந்தவன் 'பகவானே நான் நல்லவனாக மாறிவிட்டேன். இந்த நாளை எல்லோரும் தீபமேற்றிக் கொண்டாடட்டும்; நல்லவர்களாக வாழட்டும். இதற்கு அருள் புரியுங்கள் என்று பணிவுடன் வேண்டினான்.

இவ்வாறு தீமைகள் புரிந்த நரகாசுரன் தன் ஆணவம் அடக்கப்பட்டு உண்மையுணர்ந்து ஞானம் பெற்ற தினமே தீபாவளித் திருநாள். புன்மை இருள் அகன்று நல்லொளி பரவிய அற்புத நாள் தீபாவளி என்றும் அவை குறிப்பிடுகின்றன. இதனாலேயே தீபாவளித் தினத்தன்று பல இடங்களில் தீபங்களை வரிசையாக வைத்து ஒளிரச் செய்கிறார்கள். வடஇந்தியாவில் இந்த வழக்கம் அதிகமாக நிலவுகிறது.

புராட்டாதிச் சனிக்கிழமைகளில் சனி பகவானுக்குப் பிரீதியாக எண்ணெய் எரித்து பிரார்த்தனை செய்து விட்டு இருக்கும் போது தீபாவளி வருகிறது. அந்தவகையில் ஒளித்திருநாள் இரட்டிப்பு நம்பிக்கையைக் கொண்டு வருகிறது. ஆம்; சகோதரிகளே இத்தீபத்திருநாள் எமக்கும் நம்பிக்கை ஊட்டும் நன்னாளாக அமையட்டும். ★

## கவிதைத்துளி

அன்று: சீதையைப் பறிகொடுத்த - இராமன்
அவள் போன பாதையை
சடாயுவால் அறிந்தான்...

இன்று: இராமர்களைப் பறிகொடுத்த
- நம் சீதைகள்
அவர்கள் போன பாதையைக்கண்டு
கொள்ள
அரசாங்க அலுவலக வாசல்களில்
சடாயுக்களைக் காணத் தவமிருக்
கிறார்கள்.

எஸ். ராஜ்மோகன், கொம்மாதுறை.

## பாரதி நீ மீண்டும் பிறக்காதிருப்பதே நன்று

நீ மீண்டும் பிறந்திட வேண்டும் - என்றும்
நிலைகொள்ளாது தவிக்கின்ற உள்ளங்கள் உண்டு
நீ பிறக்காது இருப்பதே நன்று - என்று
நினைக்கின்ற உள்ளத்தில் நானும் இங்கொன்று

தீண்டாமை ஒழித்திடு என்றாய் - இன்று
வேண்டாமை பேசிடும் வீணர் வாழ்கிறார் நன்றாய்
வேற்றுமை முரசெங்கும் முழங்கும்
ஆற்றாமை கண்டு நீ அழுதிட வேண்டும் - அதனால்
பாரதி! நீ மீண்டும் பிறக்காதிருப்பதே நன்று.

எதிலும் சுதந்திரம் என்றாய் - ஆனால்
அதிலும் தந்திரம் செய்கின்றார் கண்டாய்
பெண்கள் சமத்துவம் மங்குதல் கண்டு
கண்கள் நீர்சிந்திக் கலங்கிட வேண்டும் - அதனால்
பாரதி! நீ மீண்டும் பிறக்காதிருப்பதே நன்று.

ஒருவருக்குணவில்லை யென்றால் - இந்த
உலகையே அழித்திடு என்றாய்
ஒருவேளை உணவுக்கு வழியின்றி வாடுவோர் கண்டு
உள்ளமுடைந்து நீ உருகிடவேண்டும் - அதனால்
பாரதி! நீ மீண்டும் பிறக்காதிருப்பதே நன்று.

ஆணுக்கு பெண் அடிமையாகாது என்றாய் - ஏழைப்
பெண்ணுக்கு வாழ்வில்லை சீதன மொன்றால்
பணமொன்றுக்காகவே பிணமது சுமக்கும் - மக்கள்
மனநிலை கண்டு நீ மயங்கிட வேண்டும் - அதனால்
பாரதி! நீ மீண்டும் பிறக்காதிருப்பதே நன்று.

-ஆரையூர் அருள்-

### இரண்டு எஞ்சின்கள்...

நானும் எனது நண்பனும் அவனது ''வொக்ஸ் வேகன்'' காரில் சென்று கொண்டிருக்கும் போது வழியில் சோதனைத் தலம் ஒன்று வந்தது. காரை நிறுத்தி விட்டு கீழிறங்கும் போது சோதனைக்காரர் காரின் பின்புறம் வந்து 'டிக்கியை' திறக்குமாறு கூற, நண்பன் சொன்னான். 'அதற்குள் எஞ்ஜின் சார்' என்று. அவரோ அதை நம்பாமல் மீண்டும் மீண்டும் திறக்குமாறு கூற, அவனோ திறந்தான். உடனே டிக்கியைப் பார்த்த சோதனைக்காரர் 'ஓ! இந்தக் காருக்கு இரண்டு எஞ்ஜின்' எனக்கூறி வழியனுப்பி விட்டார்.

வாகரை தேவன்

# ஞாயிற்றுச் சக்தியும் அதன் சமநிலையும்

எம். வர்ணகுலசிங்கம் (B.A Hons)
(உதவி நூலகர், கி. ப. கழகம்.)

சக்தி வளங்கும் மூலகங்களுக்கெல்லாம் அடிப்படை மூலகமாய் இருப்பது ஞாயிறு. இதிலிருந்தே புவியிற் காணப்படும் சக்தி மூல வளங்கள் தமது சக்தியைப் பெற்று வருகின்றன. உயிரினங்கள் தமது சக்தியை உணவுச் சங்கிலி மூலம் பரிமாறிக் கொள்கின்றன. தாவரங்கள் நேரடியாக ஞாயிற்றில் இருந்து சக்தியைப் பெற்று சேமித்து வைக்கின்றன. சூரியனில் இருந்து கிடைக்கின்ற சக்தி பல பெயர்களைக் கொண்டமைந்தது. சக்தியின் பண்பு அவற்றின் வினைத்திறன் என்பவற்றிற்கு ஏற்ப அவைக்கென சிறப்புப் பெயர்கள் வளங்கப்படலாயின. சூரியனில் இருந்து பெறப்படுகின்ற சக்தியில்,

**A)** பொறிமுறைச் சக்தி;

இது பொருட்களின் அசைவுக்கான சக்தி எனக் குறிப்பிடப்படும். இது இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதில்.

1. இயக்க சக்தி: இது இயக்கம் பெற்ற பொருட்கள் தமது இயக்கத்திற்காக உபயோகித்த சக்தியாக இருக்கும்.
2. இயக்கத்திற்கு பயன்படுத்தப்படாது ஒவ்வொரு பொருளிலும் இடம் பெற்றிருப்பது நிலைப்பண்புச் சக்தியாகும். இச்சக்தி ஓய்வு நிலையில் காணப்படும் எந்தப் பொருளிலும் காணப்படுவதாய் இருக்கும்.

**B)** இரசாயன சக்தி;

இது இரசாயனக் கூட்டுக்களில் கலந்திருப்பது. கூட்டுக்களைப் பகுப்பதன் மூலம் இந்த சக்தியினை வெளியே கொண்டு வரலாம். கதிர் வீசல் சக்தி ஒரு பொருள் தன்னுட் காணப்படும் வெப்ப இரசாயன மூலகங்களைப் பயன் படுத்தி குற்றலைகளை வெளிப்படுத்துவதாகவோ, உறிஞ்சி வைத்திருக்கும் கதிர் வீசலைப் பயன்படுத்தி அதன் நான்கின் அடுக்காகவோ, அதே நீளத்திலோ கதிர் வீசல் செய்கின்ற சக்தியாக இருக்கும். மூலக்கூற்று துணிக்கைகளின் மோதுகை இல்லாத பொழுது மொத்த உட்சக்தியாக காணப்படும் சூடாக இருக்கும் சக்தி வெப்ப சக்தியாக இருக்கும். இச் சக்திகளை பயன்பாட்டுக்கு உட்படுத்துகையில் ஒன்றை இன்னொன்றாக மாற்றும் திறைமையை இயற்கையில் இருந்து மனிதர்கள் பெற்று வருகின்றார்கள். இதற்கு உதாரணமாக வெப்ப சக்தியை இயக்க சக்தியாகவோ, இயக்க சக்தியை ஒளிச் சக்தியாகவோ, கதிரி வீசல் சக்தியாகவோ மாற்றலாம் என்பதை சான்றாக குறிப்பிடலாம்.

இவ்வாறு மாற்றம் அடைகின்ற சக்தி சூரியனில் இருந்து மின்காந்த குற்றலைகள் மூலம் கிடைக்கின்றன. வெப்பத்தினை உறிஞ்சுகின்ற முகில்கள் நிலமேற்பரப்பு என்பனவும் கதிர் வீசலைச் செய்கின்றன. இவற்றை நெட்டலைக் கதிர் வீச்சு எனலாம். நெட்டலைகளைவிட குற்றலைகளே செறிவும், பொருட்களை ஊடறுத்துச் செல்லும் சக்தியும் உள்ளன. புவியில் இருந்து 9,28,70000 மைல் (149,450 000 கி. மீ) தூரத்தில் அமைந்துள்ள சூரியன் காபனிலும் நைதரசனிலும் மாற்றம் ஏற்படாது ஒவ்வொரு செக்கனுக்கும் 800 மில்லியன் தொன் ஐதரசனை கீலிய மாக மாற்றுவதன் மூலம் இக் கதிர் வீசலைச் செய்கின்றது. இந்த மாற்றம் சூரியனின் மேற்பரப்பில் $94 \times 10^4$ லாங்கிரி அல்லது 5750°C வெப்பத்தினை வைத்துக் கொண்டிருக்க காரணமாகின்றன. இந்த வெப்ப நிலைமை 10,000 மில்லியன் வருடங்களுக்கு நீடித்திருக்கும் என மதிப்பிடப் பட்டிருக்கின்றது.

சூரியனை ஒரு கறுத்த பருப் பொருள் எனக் கொண்டால் அது அதன் வெப்ப நிலையின் நான்கின் பெருக்கத்துக்கு சமனானதாக

அதன் கதிர் வீசல் இருக்கும் ($ST^4$ என்ற 'ஸ்ரீபன் போல்மன்' விதிப்படி கதிர் வீசலைச் செய்கின்றது. தவிரவும் ஒரே நீளத்தில் அலைக் கதிர்கள் வீசுவதில்லை. பல நீளங்களை உடைய குற்றலைகளை வெளியிடுகின்றது. நிறமாலை ஆய்வுகள் மூலம் அவ் அலைகளின் நீளங்களும், நிறங்களும், பண்புகளும் எடுத்துக் காட்டப்படுகின்றன. அலை நீளங்கள் மைக்கிரான்(U) அளவுகளில் அளவிடப்பட்டுள்ளது. ஒரு மைக்கிறான் என்பது ஒரு மீட்டரை மில்லியனாகப் பகுத்ததில் ஒரு பங்கு. 0.2 U க்கும் 4.0 U க்கும் இடையில் குற்றலைகள் அதிகளவில் இருக்கும். 'பிளாங்' விதிப்படி 99%மான சக்தி இவ்வலை நீளங்களுக்கிடையில் காணப்படுகின்றது. இவ் அலைக்கதிர்கள் கடல் மட்டத்தினை அடைகையில் 0.3 U க்கும் 3.0 Uக்கும் இடையிலே கூடிய செறிவுடையதாக இருக்கும் குற்றலைகளின் உச்சித்தன்மை 0.6 U ஐ அண்மித்ததும் மத்திய தன்மை 0.8 U ஐ அண்மித்தும் இருக்கும். இதன் மேற் காற்பகுதி 1 U வாக இருக்கும் 0.2 U க்கும் 1.0 U க்கும் இடையில் இருக்கும் செறிவின் தன்மை நீளம் கூடும் பொழுது குறைந்து செல்வதனை அவதானிக்கலாம்.

புற ஊதாக் கதிர்கள் 0.36 U க்கும் குறைந்த அலை நீளத்தைக் கொண்டன. உயரமான பகுதிகளில் குறைந்த அலைக்கதிர்கள் காணப்படுகின்றன. 0.26 U நீளமான புற ஊதாக்கதிர்கள் வெப்ப எரிச்சலினை ஏற்படுத்துவன. இவை திசுக்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்துவன. 0.33 U க்கு குறைவான நீளமுள்ள கதிர்கள் ஒக்சிஜின், ஓசோன் ஆகியவற்றால் வடிகட்டப்பட்டு படை மண்டல கீழடுக்களை அடைகின்றன. இவ்வடிகட்டுதல் செயல் முறைதான் தீவிர புற ஊதாக் கதிர்களின் நச்சுத்தன்மையில் இருந்து பாதுகாப்பளிக்கின்றது. நன்கு ஒளியூடுருவும் தன்மை வாய்ந்த இவ்வகை அலைகள் புவி மேற்பரப்பினை முற்றாக அடைவதில்லை. உயரமான பகுதிகளில்தான் அவற்றின் பயன்பாடு அதிகமாக உள்ளது. மலைப்பகுதிகளில் இவ் அலைகளின் பயன்பாடு அதிகமாக உள்ளது. மேலடுக்குகளில் இருந்து பனிக்கட்டிகளுடன் கலந்து மேற்பரப்பினை அடைகின்றன. இவை நோய் நீடிக்கக் கூடிய பண்பினையும் பெற்றிருக்கின்றன. 0.3U நீளமுள்ளநோய் நீக்கத்தக்க அலைகள் படைமண்டலத்தின் மேற்பகுதியைக் கூட அடைவதில்லை. ஓரளவுஇப் பண்பினைக் கொண்ட 0.33 U அலைகள் மலைப்பகுதிகளில் கூடுதலாக இருப்பதனால் மலைப்பகுதிகள் நோய் நீக்கும் சுவாத்தியமான பகுதிகளாக இருக்கின்றன.

கட்புலனாகும் ஒளி அலைகள் 0.36 Uக்கும் 0.76 U க்கும் இடையில் காணப்படுகின்றன. இவற்றை நாம் பார்க்கக் கூடியதான ஒளி என்கிறோம். 0.76 U க்கும் கூடுதலான நீளமுடையவை அகச் சிவப்பலைகள் (INFRA RED) எனப்படுகின்றன. ஏறக்குறைய 52%மான சூரிய ஒளிக்கதிர் வீசல்கள் கட்புலனாகும் ஒளியாகவே எமக்கு கிடைக்கின்றன. 10 U வரையிலான அலைகளும் இருக்கின்றன. அவைகள் நெட்டலைகள் எனப்படும்.

வளிமண்டலத்தின் மேற்பகுதியை அடைகின்ற சூரியக் கதிர்களில் புற ஊதா, கட்புலனாகும் ஒளி, அகச் சிவப்பு அலைகள் என்பன முறையே 5:52:43 என்ற விகிதத்தில் வருகின்றன. பிரித்தானியாவில் 5121' இல் இதன் விகிதாசாரம் 1:40:60 என அவதானிக்கப்பட்டுள்ளது. கட்புலனாகும் ஒளி அலைகள் பல நிறங்ளைக் கொண்டவை. 0.59 U வுக்கும் 0.76 U க்கும் இடைப்பட்டவை இளம் சிவப்புத் தொடக்கம் முழுச்சிவப்பாக உள்ளது. இவைகளை தாவரங்கள் ஒளித்தொகுப்புக்காக உறிஞ்சிக் கொள்கின்றன. 0.49 U-0.55 U வரையிலானவை மஞ்சளில் இருந்து பச்சை வரை வரும் நிறங்களைக் கொண்டவை. இவைகளைத் தாவரங்கள் பிரதிபலிப்பதனால் தாவரங்கள் பசுமையாக காட்சியளிக்கின்றன.

(அடுத்த இதழில் தொடரும்...)

# ஒன்றாவோம்

அ. அன்பழகன் குரூஸ்

நான் எறிந்ததால்
உடைந்தது உன் பல்!
நீ எறிந்ததால்
உடைந்தது என் மூக்கு!
இன்னும் எதற்கு
நமக்குள் வீண் வீச்சு.
சுருட்டுங்கள் போவோம்
பாசறைக் கல்ல, பாச அறைக்கு..

எறிக்கிறது வெயில்
சுடுகிறது மணல்.
எரிகிறது உடல்.
படுக்கப் பாய் வேண்டாம்.
நிற்க நிழலாவது வேண்டுமல்லவா?
எங்கே......!

கொண்டா உன் குடையையாவது;
ஒன்றாக ஒதுங்குவோம்.

பல் விழுந்த எனக்குப்
பொல்லு வேண்டும் ஊண்டி நடக்க!
நில் நீ;
தோளைத் தா,
தோழமையோடு செல்வோம் நாம்.
இது மனிதவர்க்கத்தின்
மறு பிரதியல்ல.
உறவுகளின் உண்மைப் பிரதி.
அப்படியிருக்க,
ஏன் நீ புரட்டிப் பார்க்கிறாய்.
புரட்சி போதும், நேரே பார்
நெருப்பு அணைந்து, நிம்மதி தெரியும்.

## நேர் எழுத்துப் போட்டி

| 1 | 2 | 3 |
|---|---|---|
| | | |

2 ⟶ 3 — பெட்டிகளை நிரப்பினால் ஒருவரின் பெயர்
1 ⟶ 3 — ,, ,, ஒரு மிருகத்தின் பெயர்
1 ⟶ 2 — ,, ,, ஒரு விதமான குடிபானம்

சரியான விடைகளை நிரப்பி எதிர்வரும் 25 - 12 - 92 க்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

எங்கே பாாக்கலாம்!

# மலர்ந்தும் மலராத.........



— வாழையூர் ஜெகா —

அத்தியாயம்: 5

கார் வேகமாக சென்று கொண்டிருந்த தால், மதிய போசனத்திற்கு மட்டக்களப்பை அடைந்து விடலாம்; மட்டக்களப்பு நெருங் கிக் கொண்டிருந்தது; என் மனக்குதிரை அதை விட வேகமாகப் பறக்கத் தொடங்கியது. "இவளை என்ன செய்வது?" "ஒரு ஹோட் டலில் தங்க வைப்பது தான் நல்லது!" "இவளு டைய அண்ணனின் காதலியை எப்படிக் கண்டுபிடிப்பது?' அவன் இறக்குந் தறுவா யில் கூறிய சொற்கள் யாரைக் குறிப்பது?" "இவளையா" இல்லை! இல்லை! அவனது காதலியைத்தான்!" "அவன் இறந்து விட் டான் என்றால் இவளது விடுதலையில் எதுவித பிரச்சனையும் இருக்காது!" நிச்சயம் அவளாகத்தான் இருக்கும்!" "அவளுடன் எப்படி தொடர்பு கொள்வது?" "என்னை அவளுக்கு யார் என்றே தெரியாது!" "இவள் மூலம் தான் தொடர்பு கொள்ள வேண்டும்!" இலேசான செருமல்ஒன்றைவெளிவிட்ட நான்' ஆமா! உன் அண்ணனின் காதலி எந்த ஊர்?" என்றேன். "மட்டக்களப்பு" என்று அவளிடமிருந்து பதில் வந்தது. "ரொம்ப இலேசாகப் போய்விட்டது "என்றேன் நான். "எப்படி?" என்றாள் அவள். "நாம் இப் போது அங்கு தான் போய்க் கொண்டிருக் கிறோம். இன்று மாலை எனக்குத் திரு மணம்! ஆகவே நீ ஏதாவது ஹோட்டல் ஒன்றில் தங்கு! பத்திரிகை மூலமோ, வேறு எப்படியோ விளம்பரம் கொடுத்து அவள் எங்கிருந்தாலும் உடனடியாக உன்னைச் சந் திக்கச் செய்! அதன் பிறகு நான் கவனித்துக் கொள்கிறேன்" என்று நான் கூறும் போது கார் மட்டச்களப்பை அடைத்து விட்டது. ஹோட்டல் ஒன்றில் அவளுக்குத் தங்க ஏற் பாடு செய்து விட்டு, காரையும் இலேசாகக் கழுவி விட்டு வீட்டை அடைந்தேன். நேற் றும் இன்றும் நடந்த சம்பவங்களை என் குடும்பத்தாருடன் பரிமாறி மதிய உணவை யும் முடித்துவிட்டேன். எதற்கும் மாலைக் குள் அவளை ஒருமுறை பார்த்துவிட வேண்டு மென்று என் மனசு துடிச்சுது. ஆனால் எனக்கோ கொஞ்சமும் ஓய்வில்லாமல் வேலை கள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தன. திரு மணத்திற்கு அவளையும் அழைத்து அவ ளுக்கும் திருமணச் சாப்பாடு கொடுக்கலா மென்றால், அவளை எப்படி அழைத்து வரு வது என்று எனக்கு ஒரு ஐடியாவுமே வர வில்லை. அவள் இங்கு வந்தால் "இவள் யார் என்பதை எல்லோருக்கும் விளங்கப் படுத்த வேண்டும். "என் குடும்பத்தாருக்கு மேலோட்டமாகச் சொல்லி விட்டேன்!" "அவளைக் கூட்டிவந்தது- ஹோட்டலில் தங்க வைத்தது பற்றி- சொல்ல வில்லை." "இதனால் அநாவசியமான பிரச்

சனைகளே ஏற்படும்.'' ''அவள் அங்கேயே இருக்கட்டும்'' 'மடிந்தால் நாளை அவளைச் சந்தித்து மேற்கொண்டு அவளது அண்ணனின் காதலி பற்றி விசாரிக்கலாம்.'' நான் அடிக்கடி கற்பனையில் மூழ்குவதையும் என் வாய் முணுமுணுப்பதையும் என் தாயார் கண்டு விட்டார். ''நீ என்ன அடிக்கடி உன் பாட்டிலே சிரிக்கிறாய்! கதைக்கிற மாதிரி இருக்கிறாய்!'' என்று என் தாயார் கேட்ட போது ''முன்பின் தெரியாத ஒருத்தியை எனக்கு கட்டி வைக்கப் போறீங்க! அவளுடன் தான் நான் ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தேன்.'' என்று நான் கூறிச் சமாளித்தேன். திட்டமிட்டபடி நன்கு விமரிசையாக எனது திருமணம் நிறைவேறியது. அன்றிரவு என் அறைக்குள் என் தாலிகட்டிய மனைவி காலடி எடுத்து வைக்கிறாள். அவளை அரவணைத்து, அச்சத்தைத் தவிர்த்து, நேற்று நடந்த சோகக்கதையை அப்படியே அவளிடம் கூறுவிடுகிறேன். அதுவரை தன்னையே மெய் மறந்து, கதையையே கேட்டுக் கொண்டிருந்த அவள், திடீரென எனது பிடியைத் தளர்த்தி விட்டு, அழ ஆரம்பித்து விட்டாள். ''ஏன்தான் இந்தச் சந்தோசமான நேரத்திலே இந்த வெறுவாய்க் கிலங்கெட்ட கதையைச் சொன்னேனோ'' என்று என்னையே நான் திட்டிக் கொண்டு, அவளை எவ்வாறு தேற்றுவது என்று யோசிக்கலானேன். ஒதுங்கியிருந்த அவளருகே நகர்ந்து அவளது காந்தள் விரல்களைப் பிடித்து ''பிளீஸ்! நான் சொல்வதைக் கொஞ்சம் கவனமாகக்கேள்! நேற்று நீ அதேமாதிரி காரில் வந்து இதே மாதிரி ஒரு சம்பவம் நடந்திருந்தால் என்ன செய்திருப்பாய்?'' என்று கெஞ்சலானேன். ''நோ! நோ! நேற்று முழுவதும் நீங்கள் யாரோ ஒருத்தியுடன் இருந்திருக்கிறீர்கள்! உங்களை நம்ப முடியாது!'' என்று விம்மி விம்மி அழுதாள். நேரமோ இரவு 11 மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. திருமண **வீட்டு** இரைச்சல்களெல்லாம் அடங்கி எங்கும் நிசப்தமாகி விட்டது. இனிமேல் அறையில் அழுது சண்டையிட்டால் கூட அது விடிந்ததும் அம்பலம் தான். அவளது கையைக் காலைப் பிடித்தாவது அவளது அழுகையை முதலில் நிறுத்த வேண்டும் என்று எண்ணிய நான் இயன்ற மட்டும் அவளைக் கெஞ்சிப்பார்த்தேன்.

(தொடருங்கள் பார்க்கலாம்)

## நவீன பஞ்சதந்திரம் - 1

*கற்பனைக் கதை*

**பாண்டிருப்பு சிவா**

ஒரு நாள் ஒரு காகம் தாகத்தினால் நீர் தேடி அலைந்தது. கடும் வரட்சியினால் நீர் எங்குமே கிடைக்கவில்லை. இறுதியாக குழாயருகே இருந்த ஒரு பெரிய பானையில் அடியில் மட்டும் சிறிதளவு நீர் இருப்பதைக் கண்டது. அதற்கு பழைய பஞ்ச தந்திரக் கதையின் ஞாபகம் வந்தது. இந்தப் பெரிய பானை நிறைய கல்லைப் பொறுக்கிப் போடுவதனால் எவ்வளவு கற்கள் வேண்டும்! முன்னரென்றால் வீதித்திருத்தத்திற்காக வீதி ஓரங்களில் கற்குவியல்கள் காணப்படும். இப்போதுதான் வீதியில் இருந்த கற்களையே காணவில்லையே! காகம் சிறிது யோசித்தது. நரிக்கு காலில் வடையை வைத்துவிட்டு ''கா'' ''கா'' என்று பாடிய காகமாயிற்றே! குளிர்பானக் கடையை நோக்கிப் பறந்தது! சோடா குடித்து விட்டு வீசிய 'ஸ்ரோ' ஒன்றை வாயில் கவ்வியது; பானைக்குள் 'ஸ்ரோ' வை விட்டு நன்றாக உறிஞ்சிக்குடித்தது.

## இவளா என் காதலி

வாகரை தேவன்

உன்னைப்
பெண்பார்க்கச் செல்கையில்
உன் அழகை உணராமல்
நான்
அடம்பிடித்த வேளை
நீயோ
பச்சைக் கொடிகாட்டினாய்.
பெற்றோர் பலவந்தம்
பண்ணுகையில்
பாகற்காயைப் போல் உனை
நேசிக்கத் தொடங்கினேன்.
என் பருவத்தில் உள்ளோர்
எல்லாம் போட்டி போட்டுக்
கொள்ளும் போதுதான்
உன்
அழகு தெரிந்தது:
உன்னை அடைய நினைக்கையில்
சம்மதித்தாய்
ஆனால் சோதித்தாய்
ஏனென்று கேட்க
உன் திறனறிந்துயர்த்த
என்றாய்
சாதாரண சோதனையில்
ஏமாற்றப்பட்டு
உன்னைப் பிரிய
பல்லாண்டின் என்னை
கண்டெடுத்தாய்
என்னை உயர்த்துவதே
உன்
சித்தம் என்றறிகையில்
நான் மடையன்
என்று
சத்தியம் செய்கிறேன்
நான் மறந்தாலும்
மறவாது, எனக்குள்
மணம் பரப்பும்
கல்வியே!
உன்னை இன்னும்
காதலிக்கிறேன்.

## நானும் ஒருவன்

அ. ரவிசங்கர்

புதை குழிகளுக்குள்
புரை யோடிப் போய் விட்ட
நியாயங்களை
தேடிக்கொண்டிருக்கும்
அற்ப ஜீவிகளுக்குள்
நானும் ஒருவன்!

ஆம்
கலகங்களையும்
குரோதங்களையும்
பசளை போட்டு
வளர்த்துக் கொண்டிருக்கும்
இந்த உலகத்தில்
சமாதானத்தை
சந்திக்கத் துடிக்கும்
சக ஜீவிகளுக்குள்
நானும் ஒருவன்!

அதர்மம் மிஞ்சி
அட்டகாசங்களை
அரவணைத்துக் கொண்டிருக்கும்
பரந்த சமுதாயத்துக்குள்
தர்மத்துக்காக
தவமிருக்கும் மனிதர்களுள்
நானும் ஒருவன்!

அநீதிகள் ஒழியாதா?
ஒரு திருப்தியான அமைதி
ஆராதனை பாடாதா?
என
அனுதினம் ஆண்டவனை
வேண்டிக் கொண்டிருக்கும்
ஆத்மீக ஜீவிகளில்
நானும் ஒருவன்

ஓர் இருண்ட
இரவுக்குள்
நின்று கொண்டு
புனிதமான விடியல்
ஒன்றுக்காக
விழிகளை மூடாமல்
விடிவு எங்கே?
விடிவு எப்போ...?
என
ஏங்கிக் கொண்டிருக்கும்
எல்லா ஜீவிகளுக்குள்ளும்
நானும் ஒருவன்!

தொடர் கதை

# மெழுகுவர்த்தி எரிகின்றது!

'முத்து மாதவன்'

கல்யாணிக்கு காலும் ஓடவில்லை கையும் ஓடவில்லை! நெஞ்சுக்குள் ஒரு மகிழ்ச்சித் திணறல் ஏற்பட நூறு தடவையாவது கடிதத்தை திரும்பத்திரும்பப்படித்தாள். 'நேர் முகப் பரீட்சையில் தேறி, ஆசிரியை வேலைக் கான நியமனக் கடிதம் அது, தைமாதம் புது வருடத்தோடு அவள் வேலைக்கு சமூகம் கொடுக்க வேண்டும், எத்தனையோ வேலை களுக்கு நேர்முகப் பரீட்சை என்று போயும், விண்ணப்பங்கள் அனுப்பியும் சோர்ந்து இருந்த வேளையில்தான், மகிழ்ச்சிகரமான இந்த நியமனம் கட்வுள் கிருபையால் கிடைத் திருக்கிறது. வறுமையான குடும்பத்தில் மூத்த பெண்ணாகிய கல்யாணியின் தந்தையும் ஒரு தமிழ் வாத்தியார்தான். நேர்மை, திறமை கொண்டு வாழ்ந்ததால், அவர் குடும்பம் ஏழ் மையில் உழன்றது, மாசிலாமணி வாத்தியார் என்றால் அவ்வூரில் தனியொருமதிப்பு இருந்து வந்தது. மனைவி பாக்கியமும், மூன்று பிள் ளைகளுமாக ஐந்து பேர் கொண்ட அந்தக் குடும்பம், அவருடைய மாதாந்த வேதனத் தில் உயிரை கையில் பிடித்துக் கொண்டு எப்படியோ வாழ்ந்து கொண்டிருந்தது. வாத் தியார் பாடசாலை விட்டதும் பின்னேரம், "ரியூசன்' நடாத்துவார்,இரவானதும் மரக்கறி தோட்டத்திற்கு நீர் இறைப்பார்...! எவ்வளவு கஷ்டப்படமுடியுமோ அவ்வளவு கஷ்டப்பட்டு மூத்தமகள் கல்யாணியை படிக்கவைத்தார்.

வீட்டின் நிலையுணர்ந்து கல்யாணியும், மிகுந்த அக்கறையோடு படித்தாள், மாசிலா மணியர் தனக்கு மூத்ததாக ஆண்பிள்ளை பிறக்கவில்லையே என்று எண்ணிய மனக் குறையை கல்யாணி எல்லா விடையங்களிலும் ஆணுக்குப் பெண் சளைத்தவள் இல்லை என்று நிருபித்திருக்கிறாள். விளையாட்டா? நீச்சலா? விவாதமா? பேச்சா? படிப்பா? எத்



துறையானாலும் கலந்து வெற்றி கொள்வது அவளது இலட்சியமாக இருந்தது. தந்தை தமிழ் வாத்தியார் என்றபடியால், பாரதியா ரின் 'பெண்விடுதலை', 'அன்னை கஸ்தூரிபாய்' 'அன்னை தெரேசா...! பாரதிதாசன் கவி தைகள் என்று புத்தகங்களை நிறைய வைத் திருந்தார். கல்யாணி அதனால் புத்தகப் புழுவானாள், ஏதாவது ஒரு புத்தகத்தை எப்போதும் வாசிப்பாள்...!இதனால் சமுதாய வீதியில் பெண்களது சுதந்திரமும், மதிப்பும் பறிக்கப் பட்டிருப்பதையும், ஆண்வர்க்கம் பெண்களை சுகபோகத்திற்கு மாத்திரம் பயன்படுத்திவிட்டு, அவர்களது எதிர்காலத் தையும், நல்வாழ்வையும், பயங்கர இருட் சிறைக்குள் அடக்கிவைத்திருப்பதையும் உணர்ந்து நெஞ்சு துடிப்பாள்.

சிறு வயது முதல் சமூக பரம்பரை விதி களில் ஊறி, அடுப்படியோடு பெண்களை அனுமதித்த பெரியோர்களது செயல்களை திட்டுவாள், அவ்வழியே வாழும் இளம் பெண்களைக் கண்டு விளக்குவாள், இவளது இலட்சியப் போக்கு தந்தைக்கு மிகவும் பிடித் திருந்த போதும் பழமையின் பண்பாட்டை அடியொற்றிய தாயோகல்யாணிக்கு ஏசுவாள்.

'அம்மா...! பெண்களால் இப்போ எதைச் சாதிக்கமுடியாது! சந்திரமண்டல பிரயாணம் முதல், ஆழ்கடலுக்கு கீழேயும் வாசம் செய்கிறாள் பெண்! நாம வாழ்வது பட்டிக்காடு தான். அதற்காக பண்பில்லாத, பகுத்தறிவில்லாத சமூகம் தனக்காக உருவாக்கிய அடிமைச் சாசனத்தை நானும் அங்கீகரிக்க முடியாது?... என்னப்பா'' என்று, மகளின் விவேகமான பேச்சால் கவரப்பட்டு நிற்கும் மாசிலாமணியாரிடம் கேட்பாள் கல்யாணி. மகிழ்ச்சி நிரம்பியவராக சத்தம் போட்டு சிரிப்பார் அவர்.

''இஞ்ச!... பாக்கியம், இது மாட்டு வண்டிக் காலமில்ல......'' ஒலி வேக ''ஜெட்'' போகிற காலம்...' காலத்திற்கேற்ற கோலம் மாறத்தான் செய்யும்..'நீபிள்ளையை முறைக்காத...' என்று மனைவி பாக்கியத்திடம் சொல்லுவார்.

''நீங்களும் உங்கட அழகு மகளும்...'' பெண் என்றா, கதைப்பது அடுத்த வீட்டுக்கே கேட்கப்படாது... பத்து ஆம்பிளைக்கு முன்னால நின்று சிரிக்கக் கூடாது...... இவ என்னடா எண்டா, ஆயிரம் சனத்துக்க, தனிய நிண்டு, பாட்டுப் பெட்டியில பேசுறா, நீங்க... தேவையில்லாத புத்தகங்களை கொடுத்து அவளை பழுதாக்கிட்டீங்க...' நாளைக்கு அவளுக்கு ஒரு கல்யாணம், காட்சி என்று வந்தா...' நாலு பேர் கேவலமாப் பேசிடுவாங்க...' சொல்லிட்டன்...... என்றபடி தோற்று விட்ட நிலையில் சமையல் அறைக்குள் போவாள் பாக்கியம்.

''அவள் கிடக்கிறாள் அம்மா, நீ! நன்றாகப்படி'' இந்த சமூகத்தை பல வழியிலும் திருத்த வேண்டுமென்றால், ஒரு மாசிலாமணிவாத்தி போதாதும்மா? வாத்திமார்கள் புறப்படணும்! கல்வியின் கையில தாம்மா இந்த உலகத்தின் உயர்வும், தாழ்வும் தங்கியிருக்கு. அதற்குத்தாம்மா ஔவையார் சொன்னார்- ''கற்கை நன்றே! கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே'' என்று... நீ! ஒரு டீச்சரா வரணும்! அப்பதான் உன்னுடைய எண்ணங்கள் ஈடேறும்'' என வேட்கையோடு சொல்லி அவள் நெஞ்சில் ஒரு கனலையே உருவாக்கியிருந்தார் மாசிலாமணி. படித்து முடித்தும் விட்டாள் கல்யாணி.

நியமனக்கடிதம் வந்த போது வீட்டில் யாரும் இருக்கவில்லை...! மாசிலாமணி வெளியே போயிருந்தார், பாக்கியம் அடுத்த வீட்டில் இருந்தாள். தாயை அவசரமாக கூப்பிட்டு ஆவலோடு படித்துக் காட்டினாள் கல்யாணி. ஆசிரியை வேலை என்றதும், ஒன்றும் விளங்காத பாக்கியத்துக்கு எரிச்சல் வந்தது. கணவனின் மாதாந்த சம்பளத்தில் அரைவயிறும், கால்வயிறுமாக காலத்தை ஓட்டிய கசப்புணர்வு மேலிட்டவளாய், 'பிள்ளையளோட மாரடிச்சி, சாகிற, தரித்திரம் புடிச்சவேல தானா கிடச்சுது, அங்க பாரு அவள் தங்கம் 'பேங்'கில கிளாக்காம்,என்ன மாதிரி சம்பளம் எடுக்கிறாள், எவ்வளவு சீதனத்தோட மாப்பிள்ளை, அவனும் 'வேங்கில வேலை செய்யிறான்... நகை என்ன? நட்டென்ன' என்று அங்கலாய்த்தாள். 'அம்மா! அதெல்லாம் வெறும் சம்பளத்துக்காக செய்யிற வேலையம்மா. ஆனா இது ஒரு சரித்திரத்தையே உருவாக்குகிற புனிதமான பணி. அட!... உனக்கு எவ்வளவு சொல்லியும் ஏறாது...' என்றாள் கல்யாணி. வாய்க்குள் 'புறுபுறு'த்தபடி பாக்கியம் போகவும், மாசிலாமணி 'உஷ்... அப்பாடா..' என்று அலுத்தபடி வீட்டிற்குள் நுழைந்தார். குழந்தையைப்போல தாவிக்குதித்து கடிதத்தை கொடுத்து... 'அப்பா... எனக்கு நியமனக் கடிதம் வந்தாச்சி!... நான் இப்போடீச்சர்'... என்று மகிழ்ச்சியாய் கூறினாள் கல்யாணி.

'முருகா!..., என்று நா தழுதழுக்க கூறிய மாசிலாமணி, களைப்பை மறந்தவராக, கடிதத்தை வாங்கிப் படித்தார். அவர் விழியோரத்தில் இலேசான நீர்க்கசிவு ஏற்பட... 'அம்மா! கடவுள் உன்னை கைவிடல்ல! கற்றவர்க்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு, காலையில எனது கதிரை பறிபோயிட்டேன்னு கலங்கினேன்; இல்லே! அதில உன் வாரிசு இருக்கப் போறான்னு சித்தாண்டி முருகன்

ஆசிவழங்கியிருக்கான்... வேட்டிக்கரையால் குனிந்து கண்களை ஒற்றினார் மாசிலாமணி. விழவா? வேண்டாமா? என்று கல்யாணிக்கும் கண்களில் நீர் தழும்பிற்று! மௌனமாக நின்ற மகளிடம் தனது 'ரிடையர்' ஆனகடிதத்தை நீட்டினார்.

'அப்.. பா! நீங்க?... கடிதவரிகளை அவளது விழிகளில் ஓடிய நீரோடு கேள்வியும் தட்டுத் தடுமாறி வந்தது: "ஆமாம்மா!... நான் ஓய்வாயிட்டன்! நீ! உழைக்கப் போறா ஒரு கண்ணில் ஆனந்தக் கண்ணீர்! ஒரு கண்ணில் வேதனைக் கண்ணீர். இதுதாம்மா! விதி!... அம்மா உனக்கு அதிகமாக புத்தி சொல்ல வேண்டிய அவசியமே இல்லை! உனது உயிர் இருக்கும் வரை, உடல்ல ஒரு சொட்டு இரத்தம் இருக்கும் வரை! மனித சமுதாய உயர்வுக்காக அறியாமை என்னும் இருளை அடித்து விரட்டும் ஒளியை தர! ஒரு போதும் தயங்காத!... இது தாம்மா இந்த ஏழைத்தந்தையோட வேண்டுகோள்... என்று குரல் கம்ம கூறினார் மாசிலாமணி.

தந்தைக்கும் மகளுக்கும் இடையில் நடந்த பாசப்போராட்டத்தில் பங்கெடுக்காது போனாலும், பார்த்து நின்று விம்மினாள் பாக்கியம்.

(தொடரும்) ★

# திருமுருக கிருபானந்த வாரியாரின் தீபாவளி சிந்தனை

கே: ராஜகோபால்
கிழக்குப் பல்கலை கழகம்.

தீபம் - விளக்கு ஆவளி - வரிசை. தீபத்தை வரிசையாக வைத்து சிவபெருமானை வழிபடுவதற்கு உரிய நாளே தீபாவளி.

தீபங்கள் ஜோதியாக விளங்கும் பெருமானை விளக்கேற்றி வணங்கி வருகிறார்கள் நம் முன்னோர்கள்.

திருக்கார்த்திகையில் விளக்கேற்றி வணங்குகிறார்கள் அல்லவா?

"விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்" என்பது ஞானசம்பந்தர் திருவாக்கு.

சிவ விரதம் 8 என்று கந்தபுராணத்தில் ஏழாவது காண்டமாகிய உபதேச காண்டங் கூறுகின்றது. 8 ஆவது காண்டமான கோதாரமா விரதமே தீபாவளி ஆகும். இவ்விரதத்தை மேற்கொண்டு சிவமூர்த்தியை வழிபட்டு நலம் பெறுதல் வேண்டும்.

உயிர்கள் யாவும் விரும்புவது ஒளி ஒன்றேயாகும். இருளை எந்த உயிர்களும் விரும்ப மாட்டா உலகிற்கு இன்றியமையாத பொருள் ஒளி ஒன்றேயாகும். துன்பத்தின் வடிவாகிய நரகத்தை இருள் என்று கூறுவது மரபு. இறைவனைத் திருவிளக்கில் ஆவாகனஞ் செய்து வழிபடுகின்ற விதியும் நமது பழமையான சாஸ்திரங்களில் உண்டு.

இறைவனை அருணகிரிநாதர் "தீபமங்கள ஜோதி நமோநம" என்று துதிக்கின்றார். "தீப விளக்கங்காண எனக்குள் சீதள பத்மந் தருவாயே" என்று சிதம்பரத் திருப்புகழில் உயர்ந்த கருத்தை உன்னுந்தோறும் உள்ளம் உருகுகின்றது.

"கோவாத முத்தமே குறையாத மதியமே கோடாத மணி விளக்கே" என்று அருட்பிரகாச வள்ளலார் துதிக்கின்றார்; தீபத்தை வழிபட்டு உள்ளே உள்ள ஆணவ இருளை ஓட்டி ஞான ஒளியைப் பெருக்க முயல வேண்டும்.

தீபாவளியன்று மது, மாமிசங்களை உண்டுகளியாட்டம் களிக்கும் தீய நெறியைக் கைவிட்டுத் தூயநெறி நின்று நலம் பெறுவார்களாக.

# இலங்கைத் தேசிய காங்கிரஸில் ஏற்பட்ட (தமிழ் - சிங்களப்) பிளவு - ஓர் ஆய்வு

வேலுப்பிள்ளை குணரத்தினம்
(விரிவுரையாளர்)
சமூக விஞ்ஞானத்துறை, கலை, கலாச்சார பீடம்,
கிழக்குப் பல்கலைக் கழகம்.

இலங்கையை பிரித்தானியர் ஆட்சிசெய்து கொண்டிருந்த வேளையில் ஆங்கிலம் கற்ற உயர் குழாம் மத்தியில் நாடு சுதந்திரம் பெறுவதற்கான ஒருமித்த மனப்பான்மை தோன்றியது. இந்த மனப்பான்மை வேறுபட்ட இனமத வேறுபாடுகளை ஊடறுப்பதொன்றாக விளங்கியது. இதன் வெளிப்பாடு என்று கூறக் கூடியவகையில் 1919 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கைத் தேசிய காங்கிரஸ் என்ற சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான ஒரு மிதவாத அமைப்பு நிறுவப்பட்டது. இன்னொரு வகையில் கூறின், வெளிநாடுகளில் சென்று உயர்கல்வி கற்று வந்த அல்லது ஆங்கில அறிவைப் பெற்று இருந்த தமிழ் - சிங்கள உயர் வகுப்பினரால் அந்நிய ஆட்சிக்கு எதிராக அல்லது சில அரசியல் உரிமைகளைச் சீர்திருத்தங்களினூடாக பெறும் நோக்குடன் அமைக்கப்பட்டதே இலங்கைத் தேசிய காங்கிரசாகும். உண்மையில் நிருவாகப் பொறுப்புக்களை பெற்றுக் கொள்வதே இலங்கைத் தேசிய காங்கிரசின் முதனிலை நோக்காக இருந்த அதே வேளை இலங்கை சுதந்திரம் பெறுவது என்பது இரண்டாந்தரத்தையே அடைந்து இருந்தது. பேராசிரியர் ஏ. ஜே. வில்சன் (A. J. Wilson) கருத்துப்படி நோக்குகையில் "பிரித்தானியர் ஆட்சியின் கீழ் வழங்கப்பட்ட பொதுத்துறை நிருவாக உத்தியோகங்களை பெற்றுக் கொள்வதே இலங்கைத் தேசிய காங்கிரஸில் அங்கம் வகித்த தமிழ்-சிங்கள தலைவர்களின் குறிக்கோளாக இருந்ததே தவிர, இலங்கைக்குப் பூரண சுதந்திரம் பொற்றுக் கொடுப்பதாக இருக்கவில்லை." எது எவ்வாறாயினும் இலங்கைத் தேசிய காங்கிரசின் மூலமாக தமிழ் - சிங்கள தலைவர்களிடையே ஏற்பட்ட பிளவுக்கான காரணங்களைக் கண்டறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

இலங்கைத்தேசிய காங்கிரசின் முதலாவது தலைவராக பொன்னம்பலம் அருணாசலம் தெரிவு செய்யப்பட்டார். இப்பதவிக்கு பொன்னம்பலம் அருணாசலம் மிகவும் பொருத்தமானவர் என சிங்களத் தலைவர்கள் மனப்பூர்வமாக விரும்பினார்கள். அருணாசலம் சுதந்திரப் போராட்டத்துக்கான அமைப்பாக மாத்திரம் இதைக் கருதவில்லை. தேசிய ஒருமைப்பாடு, இன ஒற்றுமை நன்கு வேரூன்றிச் செல்ல வேண்டும் என்ற எண்ணங் கொண்டு இருந்தார். ஆனால் அவருடைய எண்ணம் ஈடேறாமல் போய்விட்டது. தேசிய காங்கிரஸ் தோற்றம் பெற்றமையும், அருணாசலம் அதன் தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டமையும், இலங்கையில் இருந்த பெரும் சமூகங்களுக்கிடையிலான இணக்கத்தின் உச்ச நிலையை எவ்வாறு பிரதிபலித்தனவோ அதேபோல, 1921 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அருணாசலம் தேசிய காங்கிரசுடனான தனது தொடர்புகளை முறித்துக் கொண்டு அதில் இருந்து வெளியேறத் தீர்மானித்தமை சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையிலான ஒரு பிரிநிலைக்கோடு எனவர்ணிக்க முடியும். குமாரி ஜெயவர்த்தனா (Kumari Jayawardena) "முழுமையான தேசிய வாதமாகவோ அல்லது விடுதலை இயக்கமாகவோ மலராது, பெரும்பான்மை இனத்தின் கலாசார, மதக்கோட்பாட்டுக்குள் அடங்கப்பட்டது. பின்னர் சிறுபான்மையோருக்கு எதிராக சீரளிந்தது" என்றார்.

இலங்கை தேசிய காங்கிரசில் பிளவு ஏற்படுவதற்கு முன் அல்லது அந்நியர் ஆட்சிக் காலத்தில் தமிழ்-சிங்கள மக்களிடையே சிறு சிறு கருத்து முரண்பாடுகளும் பிரச்சினைகளும் உருவாகிய போதும் அவை நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்கும் பிரச்சினையாக உருவெடுக்கவில்லை. 20ஆம் நூற்றாண்டின் முதல் இரு தசாப்தங்களும் தமிழ்-சிங்கள மக்களிடையே குறிப்பிடத்தக்களவு பிரிவினைகள் ஏற்படவில்லை. 1910 ஆம் ஆண்டு முதன் முதல் குறு-மக்கல் சீர்திருத்தத்தின்கீழ் படித்த இலங்கையருக்கு சட்ட நிருவாக சபையில் இடமளிக்கப்பட்டபோது அக்காலத்தில் சிங்கள மக்களிடையே மிகவும் புகழ்பெற்றிருந்த சேர் மாக்கஸ் பெர்ணாண்டோவுடன் போட்டியிட்ட முதுப்பெரும் தமிழ் அரசியல் தலைவரான சேர். பொன். அருணாசலம் தெரிவு செய்யப்பட்ட நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கது. அருணாசலம் தெரிவு செய்யப்பட்டமை மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை திட்டத்தினாலும், ஏனைய சில அரசியல் காரணங்களினாலும் என பலர் வாதிட்ட போதிலும், ஒரு சிறுபான்மை இனத்தைச் சார்ந்தவர் பெரும்பான்மை சமூகத்தின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டமை இன்றுவரையிலான ஒரு பாரிய எடுத்துக்காட்டாகும். முதலாம் உலகப்போர் நடந்து கொண்டிருக்கையில் 1915 ஆம் ஆண்டு சிங்கள-முஸ்லீம் கலவரம் ஏற்பட்டது. இந்தியப்படையினது உதவி கொண்டு பிரித்தானியர் அதனை ஈவிரக்கமின்றி அடக்கிவிட்டனர். இவ்வேளையில் தான் பிரித்தானிய தேசாதிபதியின் கடும் நடவடிக்கைக்கு எதிராக எழுந்த கண்டன இயக்கத்துடன் பொன். அருணாசலம் உழைத்தார். லண்டன் வரை சென்று முறையிட்டு சிங்கள மக்கள் சார்பில் பெருமளவு நன்மைகளைப் பெற்றுக்கொடுத்தார். ஆகவே சிங்கள மக்கள் தமிழ்த்தலைவருக்கு செலுத்திய ஆதரவு தமிழ்தலைவர்கள் சிங்கள மக்களுக்குக் காட்டிய ஆதரவு இரு இனங்களுக்கிடையே காணப்பட்ட இன ஒற்றுமையை வெளிக்காட்டுகின்றன. ஆனால் இத்தகைய போக்கு பின்னர் பிளவடைந்து சென்றமை மிகவும் வருந்தத்தக்க சம்பவமாகும்.

இலங்கைத் தேசிய காங்கிரசில் இனப்பிளவுகள் ஏற்படுவதற்கு இரு காரணிகள் பெரும் செல்வாக்குச் செலுத்தின. அவையாவன,

1) இலங்கைத் தேசிய காங்கிரஸில் அங்கம் வகித்த சிங்கள-தமிழ்த் தலைவர்களிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு அல்லது விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இல்லாமை.

2) பிரித்தானியருடன் எப்போதும் தொடர்படுத்திப் பேசப்படும் பிரித்தாளும் கொள்கை.

சட்ட நிருவாக சபையில் இலங்கையருக்கு பிரதிநிதித்துவம் அளிக்க முற்படுகையில் சிங்களத்தலைவர்கள் பிரதேச வாரிப் பிரதிநிதித்துவத்தை வேண்டிநின்ற அதேவேளைதமிழ்த் தலைவர்கள் தமக்குச் சார்பான இனவாரிப் பிரதிநிதித்துவத்தை வேண்டி நின்றனர். 1920 ஆம் ஆண்டு அரசியல் திட்ட சீர்திருத்தத்துக்கான தனது பிரேரணைகளை முன்வைக்கும் போது 'மனிங்' எந்தவொரு தனிச் சமூகமும் மற்றைய சமூகங்களின் மீது தனது விருப்பத்தை திணிக்காதவாறு இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் இச்சீர்திருத்தம் இனவாரிப் பிரதிநிதித்துவத்தை அளிப்பதாக' கூறினார்.

மனிங்கின் இத்தகைய கொள்கையை இலங்கைத் தேசிய காங்கிரசில் இருந்த சிங்களத் தலைவர்கள் பலமாக கண்டித்தனர். ஆனால் தமிழ்த் தலைவர்கள் பலமாக ஆதரித்தனர். இத்தகைய அணுகுமுறை தமிழ்-சிங்களத் தலைவர்களிடையே கருத்து மோதலுக்கு இடமளித்தது. 1921 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் பிரதேச ரீதியாக தெரிவு செய்யப்பட்ட சிங்களவரின் எண்ணிக்கை 13 ஆக காணப்பட தமிழரின் எண்ணிக்கை 3 ஆக இருந்தது. ஆனால் ஏற்கனவே நிலவி இருந்த சட்டசபையில் உத்தியோகப் பற்றற்ற சிங்கள-தமிழ்த் தலைவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய சமமாகவே காணப்பட்டது. இதனால் இலங்கைத் தமிழர்கள் தாம் சிறுபான்மையினர் என்பதைச் சிந்திக்க மறுத்துவிட்டார்கள் என்பது மட்டுமல்ல மறந்துபவிட்டார்கள். இந்நிலையில் சிறுபான்மையி

னர் என்னும் போது இலங்கைவாழ் ஏனைய சிறுபான்மை மக்களையே சுட்டி நிற்கின்றது. தமிழ்த் தலைவர்கள் தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையிலான பிரதிநிதித்துவ விகிதாசாரம் 1920 ஆம் ஆண்டுக்கு முந்திய நிலைக்கு எடுத்துச் செல்ல வேண்டும் எனக்கோரிக்கை விடுத்தனர். இவ்வாறான ஒரு நிலையில் தான் மேற்கு மாகாணத்தில் தமிழருக்கென தனியான ஒரு தொகுதியை ஒதுக்குவதாக 1918 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண சங்கத்துக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றும்படி கேட்டுக்கொண்டார்கள். இதுவே யாழ்ப்பாண சங்கத்தினை கவர்ந்து இழப்பதற்கு காரணமாகவும் அமைந்தது. ஆனால் பீரிஸ் சமரவிக்கிரமா ஆகியோர் இத்தகைய உத்தரவாதம் யாழ் சங்கத்துக்கு வழங்கவில்லை என்று உறுதியாகக் கூறிவிட்டார்கள். அத்துடன் அது பெரும்பான்மை இனத்தவருக்குரியது என்றும் வடக்கே சென்று தெரிவு செய்யும்படி ஆலோசனை கூறவும் முற்பட்டார்கள். அவ்வாறு உத்தரவாதம் தந்தால் அறிக்கையை காட்டும்படி யாழ் சங்கத்தை கேட்டுக்கொண்டார்கள். உண்மையில் அப்பேச்சுவார்த்தை எழுத்து வடிவம் பெறாது வாய்ப்பேச்சாகவே இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு எழுதாத, வாக்குறுதியை தாங்கள் அவ்வாறு வழங்கவில்லை என்று பகிரங்கமாக வெளிப்படுத்தியமை தமிழ் மக்கள் குறிப்பாகதமிழ்த் தலைவர்கள் இலங்கைத் தேசிய காங்கிரசின் மீது நம்பிக்கை வைப்பது பயன் தராச்செய்கை என உணரத் தொடங்கினார்கள். இதன்மூலம் சிங்களத் தலைமை உறுதிப்பாடு அற்றதென்பதையும் அவர்கள் நிலைநாட்டினார்கள் என்று கூறலாம். ஆகவே அடிப்படை ரீதியான வேறுபாடுகள் காணப்பட்டாலும் தேசிய காங்கிரசுடனான தொடர்பை ஈற்றில் துண்டிப்பதற்கு நேரடிக் காரணமாக அமைந்தது, மேற்கு மாகாணத்தில் தமிழருக்கென தனியான தேர்தல் தொகுதியை ஒதுக்குவது தொடர்பான பிணக்கேயாகும்.

இலங்கையில் கடமைபுரிந்த தேசாதிபதிகளுள் மனிங் மிகத் திறமையும், மதிநுட்பமும் வாய்ந்தவராக இருந்தமையால் உரிய முறையில் எதிர்கொண்டு இந்தியாவைப் போன்று பெரியதோர் இயக்கமாக வளர்ந்து விடாமல் தடுப்பதற்குரிய அணுகுமுறையைக் கையாண்டார். 1919 ஆம் ஆண்டு தோற்றம் பெற்ற இலங்கைத் தேசிய காங்கிரஸ் இந்நாட்டின் இருபெரும் இனங்களையும் உள்ளடக்கி இருப்பதால் இந்த இயக்கம் காலப்போக்கில் தமது ஆட்சிக்கே முடிவு கட்டும் ஒரு சக்தியாக மாறிவிடும் என்பதை உணர்ந்த மனிங் தமது பிரித்தாளும் கொள்கையை வெகு இலகுவாகப் பயன்படுத்தினார். மனிங் அதற்குப் பயன்படுத்திய மிகப்பிரதான ஆயுதம் தமிழரின் விசேட தொகுதிக்கான கோரிக்கையாகும்.

பிரித்தாளும் மனிங்கின் கைவண்ணத்தைப் பற்றி பேராசிரியர் கே. எம். டி. சில்வா (K. M. D. Silva) ''..... உண்மையாக இலங்கையின் அரசியல்யாப்பு சீர்திருத்தங்களில் ஏற்பட்ட பிரச்சினைகளை அவர் கையாண்ட விதம் பிரித்தாளும் கொள்கையை நடைமுறைப்படுத்த வழிகாட்டும் பாடநெறி நூலாக கொள்ளத்தக்கது.'' என மதிப்பிடுகின்றார். தமிழ்த் தலைவர்களை இலங்கைத் தேசிய காங்கிரசில் இருந்து பிரித்தெடுத்து அதன் தேசியத்தன்மையை இழக்க வைப்பதில் மனிங் வெற்றி கண்டார். ஆனால் மனிங் எவ்வளவு திறமையுடன் புத்திசாதுரியத்துடன் செயற்பட்டு இருந்தாலும் சிங்களத் தலைவர்கள் தகுந்தளவு எச்சரிக்கையுடன் நடந்து கொண்டு இருந்தால் பிரிவினைச் சக்திகள் நாட்டில் வேரூன்றுவதினின்றும் ஓரளவுக்காவது தடுத்து இருக்க முடியும். இன்னொரு வகையில் கூறின் இனப் பிளவு ஏற்படுவதற்கு சிங்களத்தலைவர்களின் சொந்தச் செயற்பாடே காரணமாக அமைந்தது எனலாம்.

ஆகவே, பிரித்தானியரின் பிரித்தாளும் கொள்கை காரணமாகவும், தமிழ் - சிங்களத் தலைவர்களிடையே எழுந்த கருத்து முரண்பாடுகளினால் அல்லது விட்டுக்கொடுக்கும் தன்மை இல்லாததனாலும் 1921 ஆம் ஆண்டு ஒகஸ்ட்மாதம் தமிழ்த் தலைவர்கள் இலங்கைத் தேசிய காங்கிரஸில் இருந்து விலகி தமிழர் மகாசபை என்ற அமைப்பினை உருவாக்கினார்கள், இலங்கைத் தேசிய காங்கிரஸ், இந்தியத் தேசிய காங்கிரஸ் போன்று

ஒரு வெகுசனஇயக்கமாக சாதாரண பாமர பொது மக்களினதும் விருப்பு வெறுப்புக்களை யும் அபிலாசைகளையும் வெளிப்படுத்தக் கூடியதாக அமையாததன் காரணம்தான் இந்தப் பிளவுக்கு அடிப்படைக் காரணம் என்றும் ஓரளவு கூறலாம். மேலும், தமிழர் மகா சபையானது தமிழருக்கு கூடியளவு பிரதிநிதித்துவம் பெறுவதிலும் காங்கிரசை எதிர் கொள்ளும் அமைப்பாகவும் இயங்கியது. இலங்கைத் தேசிய காங்கிரஸ் தமிழர் மகா சபையை கவர்ந்திழுக்கும் முயற்சியில் ஈடுபட்ட போதும் மேற்கு மாகாண விசேட தொகுதி விடயத்தில் சமரச முடிவுக்கு வர முடியவில்லை. ஆகவே தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றப்பட்டதன் நிலைமையையும், தமிழ் மக்கள் பிரித்தானியரிடம் நலவுரிமைகளைப் பெற்றுக் கொள்ளவும் தமது உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கவும் தற்போது உறுதி பூண்டார்கள். ஆகவே இலங்கைத் தேசிய காங்கிரஸ் எல்லாச் சமூகங்களுக்கும் குரல் கொடுக்கும் தேசியத் தன்மையை முற்றாக இழந்து விட்டது எனலாம். அதாவது இலங்கைத் தேசிய காங்கிரஸ் ஒரு சிங்களபௌத்த தேசிய வாதத்தினை பேணிவளர்க்கும் ஒரு இயக்கமாகவே இயங்கியது.

20 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்தின் முடிவுக்காலத்திலே தமிழ்-சிங்களத் தலைவர்களிடையே கருத்து முரண்பாடுகள் மிகத் தெளிவான முறையில் வெளிக் கொணரப்பட்டன. மேலும் இலங்கைத் தேசிய காங்கிரஸில் இருந்து வெளியேறிய தமிழ்த்தலைவர்களது செயற்பாடானது வேறுபட்ட இன நலன்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்-சிங்களத் தலைவர்கள் ஒருபோதும் ஒரு தேசிய ரீதியான அமைப்பின் கீழ் ஒன்றுபடமுடியாது என்பதை முதலில் சுட்டிக் காட்டியது. அதேவேளை தமிழ்த் தலைவர்களின் விசேட தொகுதி பற்றிய கோரிக்கையை சிங்களத் தலைவர்கள் பிழையான வழியைக் கையாண்டு ஒரு குழப்ப நிலைக்கு இடமளித்தார்கள். சிங்களத் தலைவர்கள் சமரசத் தன்மை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, நெகிழ்ந்து செல்லும் தன்மை என்பவற்றைக் கையாண்டு இலங்கைத் தமிழரை அரவணைத்துச் செல்லும் போக்கை கையாளுவதற்குப் பதிலாக பிடிவாதக் குணமும், நீண்ட நோக்கமற்ற, நெகிழ்ந்து கொடுக்காத, ஒரு கொள்கையை பின்பற்ற முன்வந்தமை மிகவும் வருந்தத்தக்க செயலாகும். அவர்கள் பரந்த மனதுடன் விட்டுக் கொடுத்து இருந்தால் நாட்டில் சிங்கள - தமிழ் இனப்பிளவு நன்கு வேரூன்றிச் செல்வதை தடுத்து இருக்க முடியும் அல்லது தாக்கத்தின் வேகத்தினை ஓரளவு குறைத்து இருக்க முடியும் ஆனால் அவர்கள் இவ்வாறான அணுகுமுறையைப் பின்பற்ற தவறியமை இலங்கைத் தேசிய காங்கிரஸ் பிளவடைந்து அதன் மூலம் தமிழ்-சிங்கள இனப்பிளவு பரவலாக்கப்பட்டு அது தொடர்ச்சியாக நீண்ட காலத்துக்கு வளர்ச்சியடைவதற்கும் இத்தகைய செய்துறை அடிப்படையாக அமைந்தது அல்லது வழி கோலியது எனலாம்.

இம் மலருக்கான அட்டைப்பட ஓவியத்தை அமைத்துக் கொடுத்து உதவியவர் திரு. ப. ரமணீஸ்வரன் அவர்களாகும்.

- ஆசிரியர் -

# சொற் சங்கமப் போட்டி இல. 1

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாடும்மீனின் மாநிலம் | | ↓ | திரைப்பட இயக்குநர் | | | ↓ | இதன்படி மறுபிறப்பாம் | | |
| | → | | | | | | | | |
| → | | | | | | | அதிகார அடையாளம் | | ↓ |
| திருவாசகம் தந்தவர் | | | வெள்ளை மலர் | | → | | | | |
| → | | | | | | | தங்கம் சம கருத்து | | |
| தென்னிந்தியப் பாடகி | | | ↓ | அழியாத சொத்து | | | | ↓ | |
| → | | | | | | | | | |
| இராமனின் மாமன் | | | | | → | | | | |
| ↓ | பூதங்களில் ஒன்று | | | நீர்த்தாவரம் | | | | | |
| | | இவளிடம் கொடுமையாம் | | → | | | | | |

✱ அம்புக்குறி காட்டும் திசையில் சொற்கள் எழுதப்படல் வேண்டும்.

✱ அம்புக்குறி உள்ள பெட்டிகளில் எழுத்துக்கள் வராது.

பரிசு விபரம்:

முதலாம் பரிசு — ரூபா 50/-
இரண்டாம் பரிசு — ரூபா 30/-
மூன்றாம் பரிசு — ரூபா 20/-

இப்போட்டிக்கான சரியான விடைகளை எதிர்வரும் 25-12-1992க்கு முன்னர் சொற்சங்கமப் போட்டி இல. 1,
'கிழக்கொளி'
நூலகம்
கிழக்குப் பல்கலைக்கழகம், செங்கலடி.
எனும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

# உறவு என்னும் உலகங்கள் நீ தந்தது.........

## 5. மனதைப் பறி கொடுத்தேன்............

காந்த்

''யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத்து எம்நெஞ்சத்து
ஓஒ உளரே அவர். (குறள் : 1204 நினைந்தவர் புலம்பல்)

சுரேஷ்-ராதா சந்திப்புகள் அடிக்கடி நிகழ்ந்து கொண்டிருந்தன. ராதாவின் தேவைகள் அனைத்தையும் சுரேஷே நிறைவேற்றிக் கொண்டிருந்தான். காஞ்சீபுரமென்ன! கிழக்கு வாசலென்ன! கடைக்கு புதிதாக வரும் ரகமெல்லாம் சுரேஷால் ராதாவுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன. மாலை நேரங்கள் ஓய்வு நேரங்கள் எல்லாம் ஹோட்டல் கதிரைகளில் இந்த இளஞ்ஜோடிகளே காணப்பட்டனர். உல்லாசமாக காலம் கழிந்து கொண்டிருந்த வேளை பரீட்சை முடிவுகள் வெளிவந்தன. ராதாவுக்கு சகல பாடங்களிலும் 'ஏ' தரத்திலானசித்தியும்,சுரேஷுக்கு'சீ' தரத்திலானசித்தியும் கிடைத்தன. சுரேஷினது முடிவைக் கண்ணுற்ற ராதாதன் முடிவைப் பார்த்து உவகையடையாமல் கவலை தோய்ந்த முகத்துடன் காணப்பட்டாள். அதிபர், ஆசிரியர்கள் ராதாவை வாழ்த்த தேடிச் சென்று கொண்டிருந்த வேளையில், ராதாவோ சுரேஷைத் தேடி அலைந்து கொண்டிருந்தாள். எங்கோ ஒரு மூலையில் 'தன்னை ஒரு பெண் மிஞ்சிவிட்டாளே' என்ற கவலையில் சிந்தனையிலிருந்த சுரேஷை 'சுரேஷ்! என் வாழ்த்துக்கள், என்று கைலாகு கொடுக்க கையை நீட்டிய ராதாவுக்கு வேண்டா வெறுப்பாக கை கொடுத்த சுரேஷ் 'நன்றி ராதா' என்றவார்த்தைகளை உதிர்த்து விட்டு கவலையுடன் இருந்தான்,

'சுரேஷ்! ஏன் ஒருமாதிரியாக இருக்கிறீங்க' என்று ராதா கேட்க 'ஒன்றுமில்லை ராதா! இலேசான தலைவலி' என்று சுரேஷ் சமாளித்தான். அப்போதுதான் அவன் அவளை வாழ்த்த மறந்தது ஞாபகம் வந்தது. ஒரு செயற்கைப் புன்னகையை முகத்தில் தவழவிட்டவன் ராதாவின் இரு கைகளையும் இறுகப் பற்றி 'எனது வாழ்த்துகள்' என்று கூறிய பின்தான் ராதா மனச்சந்தோசமடைந்தாள். அதிபர்கள் ஆசிரியர்கள்வாழ்த்திய போதுகூட, அவள் இப்படி சந்தோசமடைந்திருக்கவில்லை

'சுரேஷ்! உங்க கவலை எனக்குப் புரியும் நாம நினைக்கிறதெல்லாம் நடந்தாவிடுகிறது! இந்த முறை போனால் போகட்டும்! அடுத்த முறை பரீட்சை எழுதி சிறந்த முடிவை எடுங்க என்று ராதா கூறிய ஆறுதல் வார்த்தைகள் சுரேஷை அவமானப்படுத்துவது போலிருந்தது எதையும் வெளிக்காட்டிக் கொள்ள விரும்பாத சுரேஷ் ''ராதா! அடுத்த வருடம் பரீட்சை நடக்குமோ? என்ன நடக்குமோ? யார் கண்டது! இனிமேல் நான் பரீட்சையே எடுக்கப் போவதில்லை'' என்றான் ''சுரேஷ்! எனக்குப் பல்கலைக்கழகத்திலல்ல! சொர்க்கத்தில் கூட இடம் கிடைத்தாலும் நீங்கள் இல்லாமல் நான் போக மாட்டேன்' என்று ராதா கண்ணீருடன் கூற, ''ராதா! என்னைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம்! நீ நிச்சயம் போகப் போகிறாய்! உனக்குரிய செலவு அனைத்தும் என்னைச் சார்ந்தது'' என்று சுரேஷ் ஒரேயடியாகக் கூறிவிட்டான். ''சுரேஷ்! என்னை உங்களிடமிருந்து பிரிக்க...'' என்று ராதா அழ ஆரம்பிக்க 'இல்லை ராதா நம்மை இனி எந்த சக்தியாலும் பிரிக்க முடியாது என்று அவன் ஆறுதல் கூறும் போது ஒரு மாணவர் கூட்டம் அவர்களைச் சூழ்ந்து கொண்டது.

மாறி மாறி ஒருவராக ராதாவை வாழ்த்திக் கொண்டிருக்க அவ்விடத்தில் நிற்க துணிவில்லாத சுரேஷ் மெதுவாக நழுவி வீட்டுக்குச் சென்று விடுகிறான். அன்றிலிருந்து பல

வாரங்களாக அவன் வெளியே வரவில்லை. ராதாவுக்கோ பரீட்சைமுடிவுகளால் ஏற்பட்ட சந்தோஷப்பனி சுரேஷைச் சந்திக்காததால் ஏற்பட்ட சோகக் கதிரால் மறைக்கப்பட்டுவிட்டது. உலகமே வெறுத்துவிட்டது அவளுக்கு.

இவ்வேளையிலே பல்கலைக்கழக அனுமதி இறுதி முடிவுகளும் வெளிவந்து விட்டன. ராதா விசேட பயிற்சி நெறிக்கும், சுரேஷும் ஏனைய சில மாணவர்கள் சாதாரண பயிற்சி நெறிக்கும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இதைக் கேள்விப்பட்ட பின்தான் சுரேஷ் பாடசாலைக்கு வந்தான். பல நாட்களின் பின் சந்தித்த நாயகனும், நாயகியும் பேச வார்த்தையின்றி மௌனிகளாயிருந்தனர். மௌனத்தைக் கலைத்த ராதா 'சுரேஷ்! எனக்கென்றால் இம்முறை பல்கலைக்கழகம் போவது விருப்பமேயில்லை. அடுத்த வருடம் இருவரும் பரீட்சை எழுதி ஒரே பயிற்சி நெறிக்குபோக வேண்டும்'' என்று கூறியதும், ''இன்று நம் நாட்டு நிலைகள் மோசமாக இருக்கின்றன! அத்துடன் ஒரு நாளைக்கு ஒரு சட்டம்! இப்படியான நிலையிலே கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடுவது முட்டாள் தனம் என்று கொஞ்சம் கோபத்துடன் சுரேஷ் சொன்னதும், 'வெரி சொறி சுரேஷ்' என்று ராதா மன்னிப்புக் கேட்டு ''உங்கள் மனம் நோக நான் நடக்க மாட்டேன்! நடப்பது நடக்கட்டும்! எல்லாம்! அவன் செயல்'' என்று கூறினாள்.

பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களால் ஏனைய மாணவர்களுக்கு ஒரு தேனீர் விருந்துபசாரம் அளிக்கப்பட்டது. அதிகமாக பொறுப்புகளையும், செலவுகளையும் சுரேஷ் ஏற்றிருந்தான் அதனால் அவனே அவ்விழாவிற்கு தலைமைப் பதவியை அலங்கரிக்க வேண்டியதாயிற்று.

'எனதருமை நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் எனது சிரந்தாழ்த்தியவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மலையிலே பிறந்த நதி, பல கிளைகளாகப் பிரிந்து புன்செய் நிலங்களையும் நன்செய் நிலங்களாக்கி இறுதியில் கடலில் சங்கமித்து, ஆவியாகி, மழையாகி மீண்டும் நதியாக உருவெடுக்கிறது. இங்கு கல்வி பயிலும் நாம், திசைகள் மாறிச் சென்றாலும், இம்மண்ணுக்கே மீண்டு நம் சேவையை அர்ப்பணிக்க வேண்டும். இதுவே யாம் இம்மண்ணுக்கு செய்யும் கடனாகும். 'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே' இதை யாம் மறக்கக் கூடாது. இன்றோ இந்நிலைமாறி இக்கரைக்கு அக்கரைப் பச்சைகளாக, நம் இளம் சமுதாயம் வளர்த்து விட்ட மண்ணை மறந்து அந்நிய தேசங்களிலே எடுபிடிகளாக இருப்பது நமக்கே பெரும் அவமானம்' நீரூற்றுபவன் ஒருவன், இளநீர் பறிப்பவன் இன்னொருவனாக இருக்கக் கூடாது என்று ராதா தன்து உரையில் உணர்ச்சிப் பிரவாகத்தில் வார்த்தைகளை அள்ளிக் கொட்டியது சுரேஷுக்கே வியப்பாக இருந்தது. ராதாவின் பேச்சைத் தொடர்ந்த தலைவர் சுரேஷ், 'இப்படி மேடைகளில் பேசுபவர்களே முதலில் வழிகாட்டிகளாக இதைச் செய்து காட்ட வேண்டும்'. என்று கூறியதும் 'நிச்சயமாக' என்று ராதா சூளுரைத்தாள்.

அடுத்து சில மாணவர்கள் தங்கள் கருத்துக்களை அள்ளி வீசினர். இறுதியாக பல்கலைக்கழக அனுமதி பெற்ற நீலா என்ற மாணவி ''பசுமை நிறைந்த நினைவுகளே பாடித் திரிந்த பறவைகளே. பழகிக் களித்த தோழர்களே பறந்து செல்கின்றோம்! நாம் பிரிந்து செல்கின்றோம்!'' என்று மிகவும் இனிமையாகப் பாடி சகலரதும் பாராட்டைப் பெற்றுக் கொண்டாள். விழா முடிந்ததும் சுரேஷ் ஐந்து ஆயிரம் ரூபா நோட்டுக்களை ராதாவின் கையில் திணித்து 'விரைவில் பல்கலைக் கழகம் ஆரம்பமாகும்! உனக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொள்! மேலும் பணம் தேவையென்றால் வெட்கப் படாமல் கேள்!, என்று கூறியதும் ராதா தன்னையே மறந்து அவனது வதனத்தையே பார்த்த வண்ணமாக 'யாரோ ஒருவர் தனக்குச் செய்யும் உதவிகள்...... இதற்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேனோ... என்று மனதுள் யோசித்த வண்ணமாக நின்று கொண்டிருக்கும் போது சுரேஷ் வேறு அலுவலாக அவ்விடத்தை விட்டு அகன்று விடுகிறான்.

அன்றிரவு தான் வாங்கிய பொருட்களையும், இதுவரை காலமும் சுரேஷ் அன்பளிப்புச் செய்த பொருட்களையும் ஒரு பெரிய சூட்கேசில் அடுக்கி வைத்து விட்டு சமையற் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தாள் ராதா. அந்நேரம் குடிசைக்குள் நுழைந்த கிழவர், ஒரு பெரிய புதிய சூட்கேஸ் இருப்பதைக் கண்டு அதைத் திறந்து பார்க்க எல்லாம் விலையுயர்ந்த சேலைகள், சட்டைகள் ஆடம்பரப் பொருட்கள்! அவர் கண்களை அவரே நம்பாமல் 'ராதா' என்று பலமாகக் கத்தினார். சவர்க்காரக் கையுடன் ஓடிவந்த ராதா என்ன பெரியப்பா நடந்தது'? என்று கேட்க அவர் அவற்றைக் காட்டி 'இது யாருடையது'? என்றார். 'இது என்னுடையது தான் பெரியப்பா' என்று ராதா சந்தோஷத்துடன் கூற 'ஏம்மா! இதை எங்கேயாவது கண்டெடுத்தாயா? அல்லது......' என்று அவர் இழுக்கும் போதே 'இல்லை பெரியப்பா! எல்லாவற்றையும் நான்தான் வாங்கினேன்' என்று நாணத்துடன் கூறினாள் ராதா.

''ஏம்மா! இவ்வளவையும் வாங்கிறதெண்டா நிறையக் காசு வேணுமே! ஏதாவது லொத்தர் சுரண்டினாயா? என்று அவர் கேட்க ''பெரியப்பா! நான் ஒரு உண்மையை உங்ககிட்ட மறைச்சுட்டன்! என்னை மன்னிச்சிடுங்க! 'நான் என்னோட படிக்கிற சுரேஷை விரும்புறன் அவரும் என்னை உயிருக்கு உயிரா விரும்புறார் படிச்சு முடிந்ததும் கல்யாணம் செய்யுறதா சத்தியம் பண்ணியிருக்கிறார்'' என்று கூறி அழ ஆரம்பித்து விட்டாள். 'அம்மா! நீ சொல்லுற சுரேஷ் அந்தக் கதிரைமலையோட மகனா?' என்று கிழவர் ஆவலுடன் கேட்க 'ஆமாம் பெரியப்பா' என்று அவள் தலையை ஆட்டினாள். ''அம்மா! அவன் ரொப்பத் தங்கமான பையன்தான்! ஆனா அவன் அப்பன் கதிரமலை ரொம்பக் கண்டிப்பானவன்! அவங்க தான் பெரிய பணக்காரராச்சே! நமக்கு ஒத்து வராதம்மா' என்று அவர் கூறியதும் ''பெரியப்பா! உனக்கு அவங்களைத் தெரியுமா! என்று ராதா கேட்க 'அவங்க வீட்டிலதானே அம்மா நான் வேலை செய்யுறன்''! 'ஆமா! அவன் உன்னை உண்மையாகத்தான் விரும்புகிறானா? இல்லை பொழுது போக்குக்கு... என்று அவர் சொல்ல அப்படியெல்லாம் சொல்லாதீங்க பெரியப்பா! நான் இல்லாமல் அவர் உயிர் வாழவேமாட்டார்! என்று தன் காதலின் தெய்வீகத்தை எடுத்துரைத்தாள் ராதா 'அம்மா! இதெல்லாம் நமக்கு சரிபட்டு வராது! நீ அவனை மறந்துட்டு, இந்தப் பொருட்களையெல்லாம் நாளைக்கே திருப்பிக் கொடுத்துடு! ஏனென்றால் கதிரமலை விசயத்தை அறிஞ்சான் எண்டா நம்மளைக் கொலையே செய்து விடுவான்! சுரேஷ் ஒரேயொரு மகன் என்றபடியால் கொஞ்சம் செல்லமாக வளர்த்துட்டான்! அதுக்காக இப்படியான ஒரு திருமணத்தை அவன் கொஞ்சம் கூட விரும்ப மாட்டான்! நமக்கு ஏனம்மா இந்த அவமானத்த!, என்று கிழவர் கண்ணீருடன் புத்திமதி கூற ''பெரியப்பா'' என்று கோபத்துடன் நோக்கிய ராதா 'காதலென்ன கடையில வாங்கிற சரக்கெண்டு நினைச்சுட்டீங்களா? எங்களுடைய காதல் தெய்வீகக் காதல் இந்த உலகமே அழிந்தாலும் என் நெஞ்சில் ஊறிய இந்தக் காதலும், அந்தப் பசுமையான இனிய நினைவுகளும் என்றைக்குமே அழியாது! நீ இந்த உடற்கூட்டை எரித்தாலும் அந்தப் புனித நினைவுகள் இருக்கும் இடத்தை அணுக முடியாது! வாழ்ந்தால் சுரேஷுக்கு மனைவியாக வாழ்வேனே தவிர வேறு எவனையும் மனதால் கூட நினைத்துப் பார்க்க மாட்டேன்! ஆனால்..... சுரேஷின் நல்வாழ்விற்காக என் வாழ்வை தியாகம் செய்ய நான் தயார்' என்று ராதா தன் சொற்பொழிவை முடித்ததும் இதற்கு மேல் அவரால் எதுவுமே பேச முடியாத நிலையில் 'அம்மா! அந்தக் கதிரமலைக்கு விசயம் தெரிஞ்சா ஆபத்து! ஏதோ புத்திசாலிப் பொண்ணா நடந்துக்க' என்று கூறி 'எனக்குப் பசிக்கல்ல' நீ சாப்பிட்டு விட்டுப்படு' என்றவாறு வெறுந்தரையிலே உடுப்பைக் கூட மாற்றாது 'சிவ''சிவ' என்று கூறிக் கொண்டு சாய ஆரம்பித்தார்.

(தொடரும்)

தீபாவளிச் சிறப்பிதழாய் ஒளிபரப்பும் ''கிழக்கொளி''க்கு
எமது உளம்கனிந்த வாழ்த்துக்கள்

# SHANGEETHA JEWELLERY

உங்கள் சகலவிதமான தங்க நகைத் தேவைகளையும்
பூர்த்தி செய்யும் ஒரே ஒரு ஸ்தாபனம்

## சங்கீதா ஜுவலரி

இல. 17/1, முனை வீதி,
மட்டக்களப்பு.

☎ 065—2196

# HARRY ELECTRICALS

**Wholesale and Retail Merchants of all Electrical Items, Bicycle spares, Winding Wire Etc.**

**Munai 1st Cross Street,**

**Batticaloa.**

☎ 065 — 2683

With Best Compliments
From

# KALKUDAH FOREIGN LIQUOR SHOP

**LICENCED INLAND & FOREIGN LIQUOR WHOLESALE & RETAIL DEALERS.**

**Main Street,**
**Valaichchenai.**

Tele : 065 - 7266 Valaichchenai.
2555 Batticaloa.

## சக்தி நூல் நிலையம்

பாடசாலை பிள்ளைகளுக்கான

* பாட நூல்கள், அப்பியாச நூல்கள்
* எழுது கருவிகள், உபகரணங்கள்

மற்றும்

சகலவிதமான வாழ்த்து மடல்கள்

அனைத்தும் பெற நாட வேண்டிய இடம்.

**சக்தி நூல் நிலையம்**

53, திருமலை வீதி,

மட்டக்களப்பு,

## IDEAL SPOT

உங்களுக்குத் தேவையான

- பலசரக்குப் பொருட்கள்
- பால்மா வகைகள்
- குளிர்பானங்கள்
- அரிசி

மற்றும், தொலைபேசி வசதிகளுக்கும் இன்றே நாடுங்கள்.

**IDEAL SPOT**

Prop: S. Joseph

187/2 Trinco Road,

BATTICALOA.

Tel: 065 - 2573


வெளிவந்துவிட்டது உதயம் வெளியீடு: 9

மண்டூர் அசோகாவின்

## 'பாதை மாறிய பயணங்கள்'

(நாவல்)

நீங்களும் இன்றே உதயம் வாசகர் வட்ட உறுப்பினராகச் சேர்ந்து வருடந்தோறும் இரண்டு உதயம் வெளியீடுகளை இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.


**புனித செபத்தியார் அச்சகம்**

65, லேடி மனிங் டிறைவ்,

மட்டக்களப்பு.

☎ 065 — 2086



இச்சஞ்சிகை மட்டக்களப்பு, புனித செபத்தியார் அச்சகத்தில் அச்சிட்டுக் கிழக்கொளி ஆசிரியர் குழுவினரால் 27 - 11 - 92ல் வெளியிடப்பட்டது.